
# குரு தேவதாத்மா

(Guru Devatatma)






(ஸ்ரீ குருவே ஒருவனின் வாழ்வும் உயிரும்)

## குரு தத்துவம்

யுக ஆச்சார்யர்

**நித்ய லீல பிரவிஷ்ட ஓம் விஷ்ணு பாத அஷ்டோத்தர**

**ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜா**



## நூலாசிரியரைப் பற்றி

ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜா உலக ஜீவன்களின் மேல் கருணை கொண்டு, இந்தியாவில் புனித கங்கை நதியோரமுள்ள தேவாரிபூர் என்ற கிராமத்தில் 1921-ஆம் ஆண்டு தோன்றினார்.

கிருஷ்ண பக்தர்களால் குருதேவர் அன்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீல நாராயண மஹாராஜா, ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து தொடங்கி வழிவழியாக வரும் ஸ்ரீபிரம்ம மத்வ கௌடிய பரம்பரையைச் சார்ந்தவர். ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்து அனைத்து உண்மைகளையும் நேரடியாக உணர்ந்தவர். ஸ்ரீலபக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதரின் சன்னியாச குருவான ஸ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மஹாராஜாவிடம் தீட்சையும் சன்னியாசமும் எடுத்தவர். பின்னர் தன் மிகவும் நெருங்கிய சிட்ச குருவான ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதருக்கு அவரது வேண்டுதலின்படி சமாதியும் கொடுத்தவர்.

அனைத்து வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள் மற்றும் அனைத்து ஆன்மீக சாஸ்திரங்களிலும் மிக நன்றாக தேர்ச்சி பெற்று சுமார் 300 நூல்களையும் வியாக்கியானங்களையும் எழுதியவர். அவை அனைத்தும் ஆங்கிலத்திலும் மற்ற மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள மக்கள் ஜாதி, மத, நிற வேறுபாடு இல்லாமல் ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மஹாராஜாவிடம் அடைக்கலம் அடைந்தனர். அவரது சுயநலமற்ற உண்மையான அன்பும், ஆதரவும், உன்னதமான ஆன்மீக சேவையும் இந்த உலகின் அனைத்து மக்களையும் எப்போதும் ஈர்க்கின்றன. ஏராளமான சேவாலயங்களையும் பக்தித் தொண்டு திருவனங்களையும் நடத்தி வந்ததுடன், ஸ்ரீல பிரபுபாதரின் வேண்டுதலால், உலகெங்கும் ராக பக்தியை அளித்தவர். உலகத்தை சுமார் 30 தடவையாவது வலம் வந்து கிருஷ்ண பக்தியை மக்களுக்கு ஊட்டியவர்.

# குரு தேவதாத்மா

## (குருவே ஒருவனின் வாழ்வும் உயிரும்)

## *(Guru Devatatma)*

யுக ஆச்சார்யர்
**ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா**

இரண்டாம் பதிப்பு
*Version 2.3 (June 23, 2024)*

வெளியீடு: குரு பூர்ணிமா (July 21, 2024)

ஒரே இறைவன்!
ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

Our acknowledgements and appreciations go to all the devotees who helped in making and printing this book.

**Author:**

**Yuga Acharya Srila Narayana Goswami Maharaja**

வெளியீடு: Gokul Publications
Gokul Bhavan, 2/5 Mission Compound
Kottaram - 629703, Kanyakumari,
Tamil Nadu, South India

மொழி பெயர்ப்பு: Bhagavati Kanti Dasa
சரிபார்த்தல்: ஶ்ரீமதி ராதிகா தேவி தாஸி

அச்சிடுதல்: அஜய் கிருஷ்ண தாஸா

தொடர்பு: bkdasa@gmail.com
gokulbhajan.com
youtube.com/c/bkdasa
purebhakti.com

Phone: +91 959 796 9492
+91 750 222 2794
+91 960 066 8797

இந்த புத்தகத்தை பிரசுரிக்க ஶ்ரீல குருதேவரின் வழியில் தீட்சை எடுத்த கீழ்கண்ட பக்தர்களும் பக்தைகளும் பொருளுதவி செய்துள்ளனர்:

ஆனந்த கிருஷ்ண தாஸா
பிரேம பிரிய தாஸி
சியாம ராணி தாஸி
அஜய் கிருஷ்ண தாஸா
பிருந்தாவன தாஸி
கிருஷ்ண பிரிய தாஸி
சியாம சுந்தர தாஸா
ஜெய ரமண தாஸா

© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense |
gvp.contactus@gmail.com

# பொருளடக்கம்


முன்னுரை......................................................................6

1. குரு நம் உயிரை விடவும் பிரியமானவர்..........................8

2. இன்று குரு நாள்.......................................................12

3. குரு சரில்லை என்றால் என்ன செய்வது?......................18

4. ஸ்ரீகிருஷ்ணர் கூட குருவை ஏற்றுக் கொண்டார்............22

5. ஸ்ரீகுரு இறைவனை விடவும் கனமானவர்......................28

6. இரண்டாம் தீட்சையின் அவசியம்................................38

வினாக்கள்......................................................................53

# முன்னுரை

*(ஆங்கில நூலின் முன்னுரையின் தமிழாக்கம்)*

மதிப்பிற்குரிய வாசகர்களுக்கு,

தனது சிக்ச குருவான ஶ்ரீல பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் கட்டளையின் படி, ஶ்ரீல பக்தி வேதாந்த நாராயண மகாராஜா ஒவ்வொரு வருடமும் இரண்டு முறைகள் உலகெங்கும் சுற்றி கிருஷ்ண பக்தியையும் சுத்த பக்தியையும் அனைவருக்கும் பிரச்சாரம் செய்து வந்தார். அவர் 2002-ஆம் வருடம் டிசம்பர் மாதம் ஆஸ்திரேலியாவிலுள்ள முர்வில்லும்பா என்ற இடத்தில் பிரச்சாரம் செய்த போது, இதுவரை அவர் குரு தத்துவத்தைப் பற்றி அளித்துள்ள உபதேசங்களையும், அவருடைய சீடர்கள் அவ்வப்போது அளித்துள்ள சொற்பொழிவுகளையும் தொகுத்து ஒரு சிறு புத்தகமாக வெளியிட உத்தர விட்டார். அதன் பின்னர் 2003-ஆம் வருடம் ஜனவரி மாதம் அவர் ஹவாயிலுள்ள ஹிலோ என்ற இடத்தில் வழங்கிய இரண்டு சொற்பொழிவுகளையும் அதனுடன் சேர்க்க வேண்டி உத்தர விட்டார்.

மேலும் ஶ்ரீல மகாராஜா ஹிலோ-வில் இஷ்ட கோஷ்டி என்ற மிக முக்கியமான கூட்டத்தில் பற்பல கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருக்கும் போது, முறையான பரம்பரையில் வரும் குருவிடமிருந்து தீட்சை மந்திரத்தைப் பெற வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சிலர் சந்தேகம் எழுப்பினர். அதற்கு அவர் அளித்த பதில்களை இதன் கடைசி அத்தியாயத்தில் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

முதன் முதலில் கிருஷ்ண பக்தியை மேற்கத்திய நாடுகள் முழுவதிலும் பரப்பிய மிகவும் வணக்கத்துக்குரிய ஶ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகராஜா ஶ்ரீல பிரபுபாதருக்கு நாம் அனைவரும் அளவில்லாமல் நன்றிக் கடன் பட்டுள்ளோம். அவர் சமஸ்கிருதத்தில் இருந்த பற்பல நூல்களையும், நம் முந்தைய ஆச்சார்யார்கள் எழுதிய விளக்கவுரைகளையும், ஶ்ரீமத்பாகவதம், ஶ்ரீசைதன்ய சரிதாம்ருதம் போன்ற உயரிய பொக்கிஷங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவைகளுக்குத் தன் விளக்கவுரைகளையும் அளித்தார். அவரது அளவில்லாத கருணையினால் தான் இப்போது அவர் எழுதிய விளக்கங்களை ஶ்ரீல நாராயண மகாராஜாவின் சொற்பொழிவுகளில் சேர்க்க முடிகிறது.

அது மட்டுமல்லாமல் ஸ்ரீல பிரபுபாதரின் ஆங்கில மொழி பெயர்ப்பும், அவைகளுக்கு அவர் ஆங்கிலத்தில் அளித்த ஆழ்ந்த விளக்கவுரைகளும், ஐம்பதுக்கும் மேலான மற்ற மொழிகளின் மொழி பெயர்ப்புகளுக்கு மூலமாக விளங்குகின்றன. எல்லா புனித சாஸ்திரங்களின் வடிவமே ஸ்ரீகுரு. ஸ்ரீல பிரபுபாதர் அப்படிப்பட்ட ஒரு மகத்தான குரு. அவர் 1977-ஆம் வருடம் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கு முன்னர், தன் மிக நெருங்கிய நண்பரும் தன் சிக்ச சீடருமான ஸ்ரீல நாராயண மகாராஜாவை, தான் புரிந்து வந்த சேவைகளைத் தொடர்ந்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

# 1. குரு நம் உயிரை விடவும் பிரியமானவர்

முதன் முதலாக நான் என் ஆன்மீகக் குருவான நித்யலீல பிரவிஷ்ட ஓம் விஷ்ணுபாத ஸ்ரீஸ்ரீமத் பக்தி பிரஞ்ஞான கேசவ மகாராஜாவின் தாமரைப் பாதங்களுக்கும், அதே போல் என் சிக்ச குருவான நித்யலீல பிரவிஷ்ட ஓம் விஷ்ணுபாத ஸ்ரீஸ்ரீமத் பக்தி வேதாந்த சுவாமி மகாராஜாவின் பாதக் கமலங்களுக்கும் என் கோடிக் கணக்கான வந்தனங்களைச் சமர்ப்பிக்கிறேன்.

ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீநாரதமுனிவர் ஸ்ரீகிருஷ்ணரின் தந்தையான வாசுதேவருக்குக் கூறியவை எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. இதே சுலோகம் பின்னர் தட்சகன் என்ற பாம்புப் பறவையினால் கடிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குப் பின்னர் சாகுமாறு சாபம் வாங்கிய பரீட்சித் மகாராஜாவுக்கு ஸ்ரீல சுகதேவகோஸ்வாமியினால் திரும்பவும் கூறப்பட்டது.

பயம் த்விதீயாபினி வேஷதஹ ஸ்யாத்
ஈஷாத் அபேதஸ்ய விபர்யயோ அஸ்ரிதிஹி
தன் மாய யாதோ புத்த ஆபஜெத் தம்
பக்தியைகயேஷம் குரு தேவதாத்மா
(ஸ்ரீமத் பாகவதம். 11.2.37)

"ஸ்ரீகிருஷ்ணரின் புரசக்தியான மாயையில் ஜீவாத்மாக்கள் கட்டுண்டு, தங்களை ஜடவுடல்கள் என்று தவறாக நினைப்பதால் பயம் உண்டாகிறது. அவ்வாறு ஜீவன்கள் பரம இறைவனிடமிருந்து விலகி விடுவதால், தாங்கள் உண்மையிலேயே அவரது நிரந்தரமான சேவகர்கள் என்ற உண்மையை மறந்து விடுகிறார்கள். எனவே ஒரு புத்திசாலியான மனிதன், முறையான பரம்பரையில் வந்துள்ள ஒரு குருவின் உதவியுடன் அந்தப் பரம இறைவனுக்கு சேவை செய்ய வேண்டும். அதற்கு அவன் தன் குருவை மிகவும் உயர்ந்த, வழிபாட்டிற்கு உகந்த தெய்வமாக மட்டுமின்றி அவரை தன் உயிராகவே ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்."

ஒருவன் என்ன காரணத்தினால் பயப்படுகிறான்? சுகதேவ கோஸ்வாமி இதை நன்றாக விவரித்துள்ளார். நாம் எல்லோரும் பயப்படுகிறோம். அனைத்து அண்ட சராசரங்களிலும் உள்ள ஒவ்வொரு ஜீவனும் அமைதி, சாந்தம் மற்றும் ஆனந்தத்துடன் வாழ வேண்டும் என்று ஆசைப் பட்டாலும் அவர்கள் அனைவரிடமும் பயமே குடி கொண்டுள்ளது.

அமைதியும் ஆனந்தமும் நம்மை நிழல் போல் தான் தொடர்கிறது.

அந்த நிழலை நாம் எட்டிப் பிடிக்க முயன்றால் நம் கையில் எதுவும் கிடைப்பதில்லை - அது அளக்க முடியாதது - அது ஒரு பொருளே அல்ல. அதே சமயம் நாம் திரும்பி எதிர் பக்கமாக நடந்தோமானால், அது நம்மைத் தொடர்கின்றது. இதுவே நிழலின் இயற்கை.

உங்கள் அனைவருக்கும் மாயை என்றால் என்னவென்று புரிந்திருக்கும் என நினைக்கிறேன். மாயை என்பது, பொருளாதாரத்தை வளர்த்தல், புலன்கள் மூலமாக உலக சுகங்களைச் சுகித்தல், மோட்சம் பெற ஆசைப் படுதல் - இவை அனைத்துமே. இவையெல்லாம் நிழல் போன்றவை. நாம் உலக சுகங்களை அனுபவித்து மகிழ வேண்டும் என்று அவற்றை நெருங்கினால் அங்கே உண்மையில் எதுவும் இல்லை என்று உணர்கிறோம். இன்னொரு விதமாகக் கூறப் போனால், இந்த உலக சுகங்களே நம் கவலைக்கும் வேதனைக்கும் மூல காரணம். உண்மையில் இந்த ஜட உலகத்தில் எந்தவித ஆனந்தமுமே கிடையாது. மாறாக கஷ்டங்களும் கவலைகளும் நிறைந்துள்ளது. நாம் முடிவில்லாத பிறப்பு இறப்பு என்ற சங்கிலித் தொடரில் சிக்கி பரிதவித்துக் கொண்டிருக்கிறோம். மாயையில் சிக்கியிருப்பதில் எவருக்குமே இன்பம் கிடையாது. ஆனால் ஒருவன் ஸ்ரீகிருஷ்ணரை நோக்கி முன்னேறினால், அனைத்து பூவுலக இன்பங்களும் முக்தியும் நம்மைப் பின் தொடரும்!

நாம் அனைவரும் பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சங்கள். ஸ்ரீகிருஷ்ணரோ ஆனந்த சாகரம். அளவில்லாத இன்பங்களுக்கும் அமைதிக்கும் இருப்பிடம். உண்மையில் அவரே பரம ஆனந்தம். அதே சமயம், நாமும் அவரது சிறு அம்சங்களானதால், இயற்கையாக நாமும் அவரைப் போன்ற சொரூப உடலை உடையவர்கள். இந்த உடல் நம் ஜடவுடல் அல்ல. ஆன்மீக உடல்.

> பயம் த்விதீயாபினி வேஷதஹ ஸ்யாத்
> ஈஷாத் அபேதஸ்ய விபர்யயோ அஸ்ரிதிஹி
> தன் மாய யாதோ புத்த ஆபஜெத் தம்
> பக்தியைகயேஷம் குரு தேவதாத்மா
> (ஸ்ரீமத் பாகவதம். 11.2.37)

அந்தப் பரம ஆனந்தமும் ரசமும் நிறைந்த சாகரமான பரம இறைவனிடமிருந்து எப்படியோ பிரிந்து, நாம் அவரது மாயா சக்தியில் சிக்கிக் கொண்டு கஷ்டப்படுகிறோம். மாயா என்றால், எது உண்மையில்லையோ அதை உண்மையென்று காண்பதே ஆகும். நாம் நமது ஜட இந்திரியங்களால் எதையெல்லாம் பார்க்கவோ உணரவோ செய்கிறோமோ அவை அனைத்தும் மாயையே. நாம் எப்போது ஸ்ரீகிருஷ்ணரை மறந்து விலகினோமோ அப்போதே உடனடியாக மாயை நம்மை கவ்விக் கொள்கிறாள். அவள் நம்மைப் பிடித்து அவளது சிறைச்சாலையினுள் உடனே அடைத்து

விடுகிறாள்.

அந்தச் சிறைச்சாலை எது? நம் உடலும் மனமுமே அது. உண்மையில் ஒன்றுக்குள் ஒன்றாக இரு சிறைச்சாலைகள் உள்ளன. நம் ஜடவுடல் வெளிச் சிறைச்சாலை. சூட்சும உடல் உள்புறம் இருக்கும் மற்றொரு சிறைச்சாலை. நாம் இவற்றில் நினைவுக்கு எட்டாத காலம் தொட்டே சிக்கிக்கொண்டு, உழன்று கொண்டும் பயந்து கொண்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை விட்டு நாம் விடுதலை அடைய வேண்டும்.

பரீட்சித் மகாராஜா ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியிடம், "இந்த முடிவில்லாத பிறப்பு இறப்பு என்ற சங்கிலித் தொடரை எவ்வாறு அறுத்து விட்டு வெளியே வருவது? மாயையிலிருந்து எவ்வாறு விடுதலை அடைவது?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி பதிலளித்தார்: "தன் மாய யாதோ புத்த ஆபஜெத்தம், பக்தியைக யேஷம் குரு தேவதாத்மா. "

மாயையில் ஒருவன் சிக்கியிருக்கும் போது, ஒருவனால் உடனடியாக அதிலிருந்து விடுதலை அடைந்து ஆன்மீக உலகமான கோலோக பிருந்தாவனத்துக்குச் செல்ல முடியாது. அது வைஷ்ணவர்கள் அல்லது சுத்த பக்தர்களின் உதவியால் மட்டுமே சாத்தியமாகும். வைஷ்ணவர்களின் சேர்க்கையால் ஒருவன் உண்மையான சுத்தமான குருவைப் பெறுகிறான். போலிக் குருவைத் தவிர்த்து உண்மையான முற்றுமுணர்ந்த சத்குருவைப் பெறுகிறான். அந்தக் குருவின் தாமரைப் பாதங்களில் நாம் சரணடையும் போது அவர் நம் முழு வாழ்க்கைக்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறார். அவர் நம் வாழ்வின் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டு, நாம் கிருஷ்ண சேவை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் போதிக்கிறார்.

குரு தேவதாத்மா என்றால் என்ன? நாம், நம் குருவை நமது சொந்த ஆத்மா, நம் சொந்த வாழ்க்கை, மற்றும் உயிரினும் மேலாக நினைக்க வேண்டும் என்பதே அதன் பொருள். அவரிடம் முழுவதுமாக சரணடைந்து அவரை மட்டுமே தஞ்சமாகக் கொள்ள வேண்டும். "தன் ஆபஜெத்". "தன்" என்றால் பரம இறைவன் ஸ்ரீகிருஷ்ணர். நாம் நம் சத்குருவின் உதவியுடன் ஸ்ரீகிருஷ்ணருக்குச் சேவை செய்யும் போது, மாயையிலிருந்து வெளியே வந்து விடுவோம்! நாம் நமது உண்மையான ஆன்மீக சொரூபத்தை நேரடியாகக் காணலாம்! ஸ்ரீகிருஷ்ணருக்கு நாம் நிரந்தரமாக சேவை செய்து கொண்டு, எல்லையற்ற ஆனந்த-ரச சமுத்திரத்தில் குளித்துக் கொண்டேயிருப்போம்! அப்போது நாம் நம்மையும் அந்த ஆனந்த சாகரத்தின் பாகமாகவேக் காண்போம். கிருஷ்ண சேவையினால் வரும் பேரானந்தத்தில் திளைத்திருப்போம்.

நீங்கள்  இந்த உண்மைகளை உணர முயற்சி செய்ய வேண்டும். இவற்றை வெறுமனே கேட்டுவிட்டு பின்னர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்வது போதாது. நாம் எப்போதும் இந்த உண்மையில் ஒன்றியிருக்க வேண்டும். நாமோ இப்போது மாயையின் இறுக்கமான பிடியில் சிக்கியுள்ளோம். எவ்வளவு தூரம் இறுக்கமாக நாம் சிக்கியுள்ளோமோ, அதே அளவு ஶ்ரீகிருஷ்ணரிடமிருந்து தூரத்தில் விலகியுள்ளோம் என்பது உண்மை. ஶ்ரீகிருஷ்ணர், சத்குருவையும் வைஷ்ணவர்களையும் இந்த உலகத்துக்கு அனுப்பி நம்மைக் காப்பாற்ற முயற்சிக்கிறார் என்பது உண்மையே. நான் இதை உணர்கிறேன். நான் ஒரு மூன்றாம் தரமான போலி மனிதனாக இருந்தேன். ஆனால் என் குருதேவர் என்னைத் தூக்கி எடுத்து இந்த உத்தமமான கிருஷ்ண சேவையில் ஈடுபடுத்தினார்.

தெய்வீக தம்பதிகளான ஶ்ரீமதி ராதாவையும் ஶ்ரீகிருஷ்ணரையும் மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவைகளே ஶ்ரீமத்பாகவதம் போன்ற அரிய வேத சாஸ்திரங்கள். மேலும் மகாபெரும் ஆச்சாரியார்களான ஶ்ரீ நாரத முனி, ஶ்ரீல சுகதேவ கோஸ்வாமி, ஶ்ரீசைதன்ய மகாபிரபு, நம் குருபரம்பரை ஆச்சாரியார்கள் - குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் கிருஷ்ண பக்தியைப் பரப்பிய பரம பூஜ்யபாத ஶ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜா, மேலும் அவரது கட்டளையின் படி செயல்படும் நான் - அனைவரும் இதையே போதிக்கிறோம்.

நான் உங்கள் அனைவரையும் இந்த ஆன்மீக உண்மைகளை நன்றாகப் புரிந்து, நேரடியாக உணர்ந்து பின்னர் அவற்றை நம் குரு பரம்பரையின் ஆச்சார்யார்கள் எல்லோருக்கும் பிரச்சாரம் செய்தது போல் நீங்களும் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.  நீங்கள் மற்றவர்களுக்குப் போதிக்காமல் உங்கள் பயிற்சியுடன் நிறுத்தி விட்டால் நீங்கள் சுய நலக்காரர்களாகி விடுவீர்கள். பலவீனமாக இருக்காதீர்கள்! பிரச்சாரம் செய்யுங்கள்!

ஶ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில், "ஸ்தானே ஸ்திதாஹா ஸ்ருதிகதாம் தனுவான் மனோபிர்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. நீ காவி உடையை அணிந்த சன்னியாசியாக இருந்தால் நீ ஒருபோதும் திருமணம் செய்வதோ, சன்னியாசத்தை விட்டு கீழே விழுவதோ கூடாது. நீ ஒரு கிரகஸ்தனாக இருந்தால் அப்படியே இரு. ஆனால் நீ ஐம்பது வயதை அடைந்ததும் கிரகஸ்த வாழ்க்கையை விட்டுவிட்டு வெளியே வர முயற்சி செய். நீ உன் வாழ்நாள் முழுவதுவே கிரகஸ்தனாக ஒருபோதும் இராதே. நீ  பிரகலாத மகாராஜாவைப் போலவோ, அல்லது பாண்டவர்களைப் போலோ ஹிரகஸ்தர்களாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் அது மிகவும் அரிது.

# 2. இன்று குரு நாள்

**ஸ்ரீல நாராயண மகாராஜா:** நான் நேற்று காலையில் கூறிய சுலோகத்தின் பொருள் என்ன?

> பயம் த்விதீயாபினி வேஷதஹ ஸ்யாத்
> ஈஷாத் அபேதஸ்ய விபர்யயோ அஸ்ரிதிஹி
> தன் மாய யாதோ புத்த ஆபஜெத் தம்
> பக்தியைகயேஷம் குரு தேவதாத்மா
> (ஸ்ரீமத் பாகவதம். 11.2.37)

இதன் கடைசி வரியான "பக்தியைகயேஷம் குரு தேவதாத்மா" - என்பதன் பொருள் என்ன?

**ஸ்ரீபாத பத்மநாப மகாராஜா:** இந்த சுலோகத்தில் ஒருவன் ஸ்ரீ குருதேவர் பரம இறைவனான சாக்சாத் ஸ்ரீ ஹரியின் ஒரு சொரூபமானதால் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவர் பரம இறைவனின் பிரதி நிதியாக, கட்டுண்ட ஜீவன்களை விடுவிக்கவே வருகிறார். அவர் "கிருஷ்ண கிருபா ஸ்ரீமூர்த்தி" யாக - அதாவது ஸ்ரீ கிருஷ்ணரின் கருணையின் வடிவமாக வந்து இழிந்து கிடக்கும் ஜீவன்களை திரும்பவும் ஸ்ரீகிருஷ்ணரின் பாதக் கமலங்களில் கொண்டு சேர்க்கவே வருகிறார். விடுதலை கிடைப்பதற்காக ஏங்கும் அந்த ஜீவாத்மா, ஸ்ரீகிருஷ்ணரின் புனிதமான பிரதி நிதியை எவ்வாறு ஏற்றுக் கொள்ள வேண்டும்? ஒருவன் ஸ்ரீகிருஷ்ணரை எவ்வாறு வழிபடுவானோ அதே போல் தான் குருவையும் உயர்ந்த நிலையில் வழிபாடுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். "பக்தியை கயேஷம் குரு தேவதாத்மா" என்றால் குருதேவரின் தாமரைப் பாதங்களில் ஒரே தீர்க்கமுடன் அசைக்க முடியாத நம்பிக்கையும் பக்தியும் கொள்ள வேண்டும் என்று பொருள். அவ்வாறு யார் ஒருவர் ஒரே தீர்க்கமுடன் பக்தி செலுத்துகிறானோ, அவன் ஸ்ரீகுருவை தன் உயிரினும் மேலாக நேசிப்பான்.

ஸ்ரீ குருதேவரின் கருணையினால் தான் பகவான் தனது கருணையை வழங்குகிறார். "யஸ்ய பிரசாதான் ந கதி குதோ அபி" - பரம இறைவனின் பிரதி நிதியின் கருணையில்லாமல் ஒருபோதும் அவரது பாதக் கமலங்களை அடைய முடியாது. சத் குரு திருப்திப் படவில்லையென்றால் இழிந்த ஜீவன்கள் இந்த உலகத்திலேயே தான் சிக்கிக் கிடக்கும்.

**ஸ்ரீல நாராயண மகாராஜா:** இது மிகவும் சிறந்த விளக்கம். நாம்

பேசுவது மட்டுமல்லாமல் அதே போல் நடக்கவும் வேண்டும். ஒரு பக்தன் மிகவும் சிரத்தையுடன் நன்றாக எப்போதும் நாம ஜெபம் செய்கிறான், சாஸ்திரங்களைப் படிக்கிறான், ஸ்ரீகிருஷ்ணரைத் துதித்துப் பாடுகிறான். ஆனால் அவன் தன் குருதேவரைப் பின்பற்றவில்லையானால் என்ன ஆகும்?

**ஸ்ரீபாத ஆரண்ய மகாராஜா:** ஒருவன் மிகவும் கவனமாக பக்தி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தும் தன் குருவிடம் நம்பிக்கையில்லா விட்டால் என்ன ஆகும் என்ற வினாவை ஸ்ரீல குருதேவர் கேட்கிறார். அதற்கு பதில்: பூஜ்யமே! இதை சாஸ்திரங்களில் பல இடங்களில் நாம் காணலாம். ஸ்ரீகிருஷ்ணரே ஸ்ரீமத்பாகவதத்தில் (11.19.21), "மத் பக்த பூஜாப்யதிக்கா" - என்னை வழிபடுவதை விட என் பக்தர்களை வழிபடுவது உத்தமம் என்று கூறியிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணர் மேலும், " ஒருவன், தான் எனது பக்தன் என்று கூறிக் கொண்டு, அதே சமயம் என் பக்தர்களிடம் பக்தி செலுத்தவில்லையென்றால் அவன் என் பக்தனேயல்ல!" என்றும் கூறியிருக்கிறார்.

யாஹ பாகவத பத வைஷ்ணவேர ஸ்தானே
ஏகாந்த ஆஷ்ரய கர சைதன்ய சரணே
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - அந்திய லிலா 5.131)

"நீ ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்துணர வேண்டுமானால், தன்னை முற்றும் உணர்ந்த ஒரு வைஷ்ணவரை மட்டுமே அணுகி அவரிடமிருந்து நீ கேட்க வேண்டும். நீ சைதன்ய மகாபிரவுவின் பாதக் கமலங்களில் முழுவதுமாக சரணடைந்தால் நீ அதைச் செய்யலாம். "

நீ ஸ்ரீமத்பாகவதத்தை அறிய வேண்டுமானால் முதலில் பரிசுத்தமான பக்தி நிறைந்துள்ள பக்த பாகவதரின் கமலப் பாதங்களில் சரணடைய வேண்டும்.

நஷ்ட ப்ராயேஷ்வ் அபத்ரேஷீ
நித்யம் பாகவத சேவயா
பகவதி உத்தம ஸ்லோகே
பக்திர் பவதி நைஷ்திகீ (ஸ்ரீமத் பாகவதம். 1.2.18)

"தவறாமல் ஒருவன் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டுக் கொண்டு, சுத்தமான பக்தர்களுக்குச் சேவைகள் செய்து, இதயத்தில் வேதனைகள் கொடுத்துக் கொண்டிருந்த அனைத்தும் அநேகமாக அழிக்கப்பட்டு, விதவிதமான தேவ ஸ்துதிகளால் எப்போதும் பாடப்படும் பரம இறைவனுக்கு அன்பு சேவைகள் புரிந்தால், அவன் நிரந்தரமாக பக்தியில் ஈடுபட்டிருப்பான். "

ஒருவன் தன் ஆத்ம ஞானத்தை மூடியிருக்கும் அனர்த்தங்களை எல்லாம் அழிக்க வேண்டுமானால், அவன் தினமும் பாகவத சேவை செய்ய வேண்டும்.

ஏக பாகவத பத - பாகவத சாஸ்திர
ஆர பாகவத பக்த பக்தி ரஸ பாத்ர
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - ஆதி 1.99)

"ஸ்ரீமத் பாகவதம் ஒரு பாகவதர். எப்போதும் பக்தி ரசத்தில் மூழ்கியிருக்கும் சுத்தமான பக்தன் இன்னொரு பாகவதர். "

துயி பாகவத த்வாரா தியா பக்தி ரஸ
தாங்ஹார ஹ்ருதயே தான்ர ப்ரேமே ஹய வாஸ
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - ஆதி1.100)

"இந்த இரண்டு விதமான பாகவதர்களின் மூலம் பகவான் சுத்தமான பக்தி ரசத்தை ஜீவனின் இதயத்தில் வைக்கிறார். இவ்வாறு அவர்களின் இதயத்தில் வீற்றிருக்கும் பகவான், பின் அதே பிரேம பக்தனின் அன்புக்குக் கட்டுப்பட்டு ஆளவும் படுகிறார்! "

பாகவத சாஸ்திரமும், பரிசுத்தமான பாகவத பக்தரின் அனுக்கிரமும் சேர்ந்தால் மட்டுமே ஒரு சாதகனின் இதயத்தில் பக்தி ரசம் தோன்ற முடியும்.

நிகுஞ்ச யூனோ ரதி கேலி சித்யைய்
யாயாலிபிர் யுக்திர் அபெக் ஷனீயா
தத்ராதி தாக் ஷ்யாத் அதி வல்லபஸ்ய
வந்தே குரோஹ் ஸ்ரீ சரணாரவிந்தம்
(ஸ்ரீ குருவஷ்டகம் 6)

"குருதேவர் எப்போதும் தன் சகிகளுடன், விருந்தாவனத்திலுள்ள குஞ்சாக் காடுகளில், யுகல கிஷோராவின் மகத்தான லீலைகள் செவ்வனே நடை பெறுவதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார். அவர் ஸ்ரீராதாவையும் ஸ்ரீகிருஷ்ணரையும் தனது மிகத் திறமையான அலங்கரிப்புக்களால் கொள்ளை கொள்ளும் அளவு மகிழ்ச்சிப் படுத்துவதால், குருதேவரிடம் அவர்களுக்கு மிகவும் பிரியம். நான் அப்படிப்பட்ட குருதேவரின் கமலப் பாதங்களில் என் வந்தனைகளைச் சமர்ப்பிக்கிறேன். "

ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீராதாவைப் பிரிந்த துயரத்திலும், ஸ்ரீராதா ஸ்ரீகிருஷ்ணரைப் பிரிந்த துயரத்திலும் எப்போதும் இருப்பார்கள். அப்படித் துயரத்தில் இருப்பவர்களை, தன் மிகச்சிறந்த திறமைகளையெல்லாம் உபயோகப் படுத்தி சேரவைத்து மகிழ்விப்பவரிடம் ஸ்ரீராதாவும் ஸ்ரீகிருஷ்ணரும் எந்த அளவுக்குக்

கடமைப் பட்டிருப்பார்கள்? அத்தகைய நெருங்கிய பக்தரின் பாதக் கமலங்களில் எவ்வளவு இழிந்த நிலையிலிருக்கும் ஒரு சாதாரணமானவனும் கூட சரணடைந்து தன் உயிரையும் கொடுப்பான். அதுபோல் ஸ்ரீராதா, ஸ்ரீகிருஷ்ணர் இரண்டு பேர்களின் அந்தரங்க ஆசைகளைப் பூர்த்தி செய்து வைக்கும் ஒரு பக்தனிடம் அவர்கள் தானாகவே நேசம் கொண்டு விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு புனிதமான வைஷ்ணவ பக்தனின் கமலப் பாதங்களில் ஒருவன் சரணடைந்தால் அவன் மேல் ஸ்ரீராதாவும் ஸ்ரீகிருஷ்ணரும் தங்கள் கருணைகளைப் பொழிந்து சீக்கிரமே அவனைத் தங்கள் திருவடிகளில் எடுத்துக் கொள்வார்கள்.

ஸ்ரீல நரோத்தம தாஸா தாக்கூரா, தன் " ஸ்ரீகுரு சரண பத்மா" பாடலில் இந்த உபதேசத்தைக் கொடுத்துள்ளார்:

குரு முக பத்ம வாக்ய சித்தத்தே கரியா ஐக்யா
ஆர நா கரிஹ மனே ஆஸா

"குரு தேவதாத்மாவுக்கு பொருள் இது: ஒருவன் தன் இதயத்தை சத் குருதேவரின் தாமரை வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் ஐக்கியப்படுத்தி விட வேண்டும்."

ஸ்ரீ குரு சரணே ரதி, எயி ஸே உத்தம கதி
ஜெ ப்ரஸாதே புரே சர்வ ஆஷா

"ஸ்ரீகுருதேவரின் பாதக் கமலங்களில் ஒருவன், தன் இதயத்தில் உண்டாகிய அன்புப் பிடிப்பான ரதியைக் கொண்டிருந்தானானால், அவன் நிச்சயமாக வெற்றியடைவான். ஸ்ரீகுருதேவரின் கருணை இன்றி ஒரு சாதகனுக்கு எந்த வலிமையும் கிடையாது. எனவே தான் பக்தியின் 64 அங்கங்களில் "குரு பாதாஸ்ரய" - ஸ்ரீ குருவின் கமலப் பாதங்களில் சரணடைவதே முதலாவது அங்கமாக அமைந்துள்ளது.

குரு பாதாஷ்ரய, திக் ஷா, குருர சேவன
சத் தர்ம சிக் ஷா ப்ருச்சா, சாது மார்கானுகமன
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம்- மத்ய. 22.115)

ஒரு சாதகன் பக்தி மார்க்கத்தில் விதிக்கப் பட்ட சேவைகளாக கீழ்வருவனவற்றைக் கடைப் பிடிக்க வேண்டும்:
(1) பரம்பரையாக வரும் தகுந்த குருவை ஏற்றுக் கொள்ள வேண்டும்,
(2) அந்தக் குருவிடம் தீட்சை எடுத்துக் கொள்ள வேண்டும்,
(3) அவருக்குச் சேவை செய்ய வேண்டும்,
(4) அவரிடமிருந்து உபதேசங்களைப் பெற்றும், பக்தி சேவைகள் புரிவதற்காக வேண்டிய கேள்விகளைக் கேட்டும் அறிந்து கொள்ள

வேண்டும்,
(5) முந்தைய பரம்பரை ஆச்சாரியார்களின் சுவடுகளைப் பின்பற்றி, குருதேவர் காட்டும் பாதையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

**ஸ்ரீல நாராயண மகாராஜா:** நீங்கள் உபமன்யுவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அவனது குரு (தௌம்ய ரிஷி), ஒரு நாள் உபமன்யுவிடம் கேட்டார்: "ஓ உபமன்யு, நீ நாள் முழுவதும் மாடு மேய்த்து, உன்னுடன் எதுவும் கொண்டு வந்து சாப்பிடவும் காணவில்லை. ஆனாலும் ஏன் நீ மிகவும் பருத்தும் கொழுத்தும் இருக்கிறாய்? நீ பசுக்களின் மடுக்களிலிருந்து பாலைக் குடிக்கிறாயா?" அதற்குப் பதிலாக உபமன்யு, "ஆமாம். நான் அதையே செய்கிறேன் " என்றான். அதற்கு அவனது குரு, " இனி அப்படிச் செய்யாதே" என்று கட்டளையிட்டார். ஆனால் அவன் என்னவெல்லாம் சாப்பிடலாம், என்னவெல்லாம் குடிக்கலாம், என்பது எதையுமே அவர் கூறவில்லை! உபமன்யு தொடர்ந்து வெளியே சென்று வேலைகளை வழக்கம் போல் கவனித்தான்.

சில நாட்கள் கழித்து அவனது குரு, "உபமன்யு, நீ இன்னமும் பருமனாகவே இருக்கிறாய். நீ இன்னமும் பசுவின் பாலைக் குடிக்கிறாயா? நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு உபமன்யு, "நான் கன்றுகள் பாலைக் குடித்தபின் மீதியாக அவற்றின் வாயிலிருக்கும் நுரையையே சாப்பிடுகிறேன். வேறு எதையுமே சாப்பிடுவதில்லை" என்று பதிலளித்தான். அதற்கு அவனது குரு,"நான் உன்னிடம் அதை சாப்பிடலாமென்று கூறவேயில்லையே. இனி நீ அதைச் சாப்பிடாதே" என்று கூறினார். மேலும், உபமன்யு குருவிடம் தான் என்னவெல்லாம் சாப்பிடலாமென்று கேட்டு, அதற்குப் பதில் பெறுவதற்கு முன்னாலேயே குரு எழுந்து சென்று விட்டார். அவருக்கு உபமன்யுவிடம் கோபம் எதுமே கிடையாது. தன் சீடன் எப்படிக் கீழ்ப்படிகிறான் என்பதைச் சோதனை செய்வதற்காகவே அவ்வாறு செய்தார்.

அடுத்த நாள் பசுக்களுடன் உபமன்யு வரக் காணாததால் அவனது குரு உபமன்யுவைத் தேடிச் சென்றார். தேடும் இடமெங்கும், "உபமன்யு, நீ எங்கிருக்கிறாய்? நீ எங்கே இருக்கிறாய்? " என்று கூவிக் கொண்டே சென்றார். கடைசியில் ஒரு கிணத்திற்குள்ளிருந்து குரல் வந்தது. "குருதேவா! நான் இந்தக் கிணற்றினுள் இருக்கிறேன்." குருதேவர், " நீ அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? " என்று கேட்டதற்கு, "குருதேவா, நீங்கள் பாலையும் குடிக்கக் கூடாது. மேலும் நுரையைக் கூட சாப்பிடக் கூடாது என்று கூறினீர்கள். ஆனால் என்னால் பசியைத் தாங்க முடியவில்லை. எருக்குச் செடியிலுள்ள பாலைக் குடித்தேன். பின்னர் தான் அது விஷமென்று தெரிந்தது. எருக்கம் பாலைக் குடித்ததால் எனக்குக் கண் பார்வை போய் விட்டது" என்று

உபமன்யு பதிலளித்தான்.

அதைக் கேட்ட குரு "நீ நான் அளித்த கட்டளைகளைத் தவறாமல் பின் பற்றி யிருக்கிறாய்" என்று மகிழ்ச்சியடைந்து உபமன்யுவைக் கிணற்றிலிருந்து வெளியே கொண்டு வந்து அவனுக்கு ஆசீர்வாதம் அளித்தார்: "உனக்கு அனைத்து வேத ஞானங்களும் இப்போதே உன் இதயத்தில் நுழையட்டும்" என்று ஆசீர்வதித்தார். உடனடியாக சுருதிகள், வேதங்கள், உபநிஷத்துக்கள் மற்றும் அனைத்து விதங்களான ஞானங்களும் உபமன்யுவின் இதயத்தில் புகுந்தன !

இவ்வாறு நாம் சரித்திரத்தில், அருணி, மற்றும் சுதாமா, ஸ்ரீகிருஷ்ணர் - இப்படி நிறைய பேர்கள் ஸ்ரீகுருதேவரிடம் சரணடைந்து எவ்வாறு அற்புதமும் ஆச்சரியமும் நிறைந்த பலன்களை அவர்கள் பெற்றார்கள் என்பதை அறிகிறோம். குருதேவரை முழுவதிலும் பின்பற்றவில்லையென்றால் நம்மால் பக்தியை அடையவே முடியாது.

நாம் இன்று பக்தி பிரச்சார விஜயத்தை ஆரம்பிப்பதால், இன்றைய நாள் "குரு நாள்!"

# 3. குரு சரில்லை என்றால் என்ன செய்வது?

தஸ்மாத் குரும் ப்ரபத்யேத
ஜிஞ்ஞாசு ஷ்ரேய உத்தமம்
சாப்தே பரே ச நிஷ்நாதம்
ப்ரமணி உபஷமாஷ்ரயம்
(ஶ்ரீமத்பாகவதம். 11.3.21)

"எவனொருவன் தீர்க்கமுடன் உண்மையான ஆனந்தத்தை அடைய விரும்புகிறானோ, அவன் ஒரு பரம்பரையில் முறையாகத் தோன்றிய குருவிடம் சரணடைந்து, தீட்சை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் அந்தக் குரு, எல்லா வேத சாஸ்திரங்களின் முடிவையையும் தர்க்கங்களாலும் ஞானத்தினாலும் அறிந்து, அந்த முடிவை மற்றவர்களும் நம்பி ஏற்றுக் கொள்ளும் வண்ணம் போதிப்பவராக இருக்க வேண்டும். மேலும், ஜடவுலகப் பொருள் சம்பந்தங்களையெல்லாம் ஒதுக்கி விட்டு, பரம இறைவனை மட்டுமே தஞ்சம் என்று ஏற்றுக்கொண்டிருக்கும் மகா உத்தமமான நபரை முறையான குரு என்று எண்ண வேண்டும். "

உதாரணமாக, ஒருவன் தன் துரதிர்ஷ்டமாக ஒரு தகுதியற்ற அல்லது போலியான குருவிடம் தீட்சை எடுத்து விட்டான் என்று எடுத்துக் கொள்வோம். அந்தக் குருவோ, ஆன்மீக உண்மைகளை அறிந்து உணராதவர். "சப்தே" என்றால் வேதங்கள், உபநிஷத்துக்கள் போன்ற சாஸ்திரங்கள் என்று பொருள். புனிதமான இறைவனின் நாமங்கள் என்றும் அதற்குப் பொருள். "பரே" என்றால் பகவான் ஸ்ரீகிருஷ்ணர். அந்தக் குருவோ ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றியோ, சாஸ்திரங்களில் கூறியிருப்பதைப் போல் அவரது நாமங்கள், மகிமைகள் பற்றியோ எதையுமே உணர்ந்தறியாத கனிஷ்த அதிகாரி. ஆனால் அவர் தன்னை ஒரு குரு என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். அவருக்கு இன்னமும் பேர், புகழ், செல்வம் அனைத்திலும் ஆசையுள்ளது. ஆனால் துரதிர்ஷ்டமாக ஒருவன் அவரிடம் தீட்சை வாங்கி விட்டான்.

இப்போது, இந்த சுலோகம் அந்தக் குருவுக்குப் பொருந்துமா? அந்தக் குருவுக்கு, சாஸ்திரங்கள் கூறுவது போல் இந்த சீடன் சரணடைய வேண்டுமா? அவன் தன் குருவை முழுவதுமாகப் பின்பற்ற வேண்டுமா, வேண்டாமா? ஒருவன் ஒரு ஆண் கழுதையிலிருந்து சுத்தமான பசும்பால் எடுக்க முடியுமா? ஒருவன் ஒரு முட்செடியிலிருந்து தித்திப்பான மாம்பழங்களைப் பெற முடியுமா? அந்த மாதிரிப் பட்ட குருவுக்கு, அந்த சீடன் எப்படிப் பட்ட கடமைகளைச் செய்ய வேண்டும்?

**ஸ்ரீல நாராயண மகாராஜா:** இந்த உலகத்தில், பிரேம பக்தியைப் பெற்ற அல்லது பெறும் நிலையிலுள்ள உத்தம அதிகாரிகளையோ, பாவ பக்தியை பெற நெருங்கியிருக்கும் மத்தியம-உத்தம அதிகாரிகளையோ, மற்றும் அசக்தி என்ற நிலையை இப்போதுதான் எட்டிக் கொண்டிருக்கும் ஒரு மத்தியம-மத்தியம அதிகாரிகளையோ காண்பது மிகவும் அரிது. அந்த உயர்ந்த நிலையிலுள்ள குருவைப் பெறுவது மிக மிக அரிது. இந்த மாதிரியான சூழ் நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? நமக்கு ஒரு குருவும் தேவை. ஒரு குரு "சாப்தே பர ச நிஷ்நாதம்" இல்லாமல் - அதாவது வேதங்கள், உபநிஷத்துக்கள், மற்றும் வேத சாஸ்திரங்களில் முடிவாகக் கூறப்பட்ட உண்மைகளை இன்னமும் உணரவில்லையென்றால் கூட - அந்த குரு தனது குருவின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் அவரைப் பின்பற்றி நடந்தால், அவர் ஒரு மத்தியம அதிகாரியாக இருந்தாலும் கூட அவரைக் கைவிடக் கூடாது. அவ்வாறு அந்த குரு தன் மகா பாகவதகுருவுக்கு எப்போதும் தன் உள்ளும் புறமும் அடக்கமுடன் சேவை செய்து கொண்டிருந்தால், அந்த குருவை கைவிடக் கூடாது. ஒரு குருவை எப்போது கைவிட வேண்டும் என்பதை ஸ்ரீல சனாதன கோஸ்வாமி அவர் எழுதிய ஹரி பக்தி விலாசத்தில் காணலாம்.

அவைஷ்ணவ முகோத்கீர்ணம்
பூதம் ஹரி கதாம்ருதம்
ச்ரவணம் நைவ கர்த்தவ்யம்
சர்போசிஷ்டம் யதா பயஹ

"ஒருவன் வைஷ்ணவரல்லாத எவரிடமிருந்தும் எதையுமேக் கேட்கக் கூடாது. பால் கூட பாம்பின் உதடுபட்டால் நஞ்சாகி விடுகிறது. அதேபோல், வைஷ்ணவரல்லாத எவரும் ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றிப் பேசினால் அதுவும் நஞ்சாகி விடும்."

ஒரு குரு தனது குருதேவருக்குச் சேவை செய்யாமலும், அவர் போதித்த சாதகங்களைச் செய்யாமலும், தனது குருதேவருக்குத் திருப்தியில்லாமலும் இருந்தால், அந்தக் குருவை கைவிட்டு விடலாம். ஆனால் அந்தக் குரு ஒரு மத்தியம அதிகாரியாக இருந்தும் கூட, மிகவும் கவனமுடனும் நேர்மையுடனும் தனது குருதேவரைப் பின்பற்றி நடந்து கொண்டிருந்தால், அவர் படிப்படியாக உத்தம அதிகாரியாகி விடுவார். எனவே அவரை ஒருபோதும் கைவிடக் கூடாது. ஆனால் அதே சமயம், அவர் குறைபாடு உள்ளவராகவும், ஸ்ரீகிருஷ்ண பக்தி சாதகத்தில் நமக்கு உண்டாகும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க இயலாதவராகவும் இருந்தால் நாம் என்ன முடியும்?

அப்படிப் பட்ட சூழ்நிலையில் நாம் அவருக்கு வணக்கங்களைச் செலுத்தி, இன்னொரு மகா பாகவத பக்தரிடம் சேர உத்தரவு கேட்க வேண்டும். அவ்வாறு ஒரு சீடன், "நான் ஸ்ரீல ஜீவகோஸ்வாமியிடம் செல்லலாமா?", அல்லது, "நான் ஸ்ரீல ரூபகோஸ்வாமியிடம் செல்லலாமா?" அல்லது, "நான் ஒரு உயர்தரமான பக்தரிடம் போகலாமா? என்று கேட்க வேண்டும். அதற்கு அந்த குரு, "இல்லை! நீ போகக் கூடாது!" என்று பதிலளித்தால் அந்த குருவை உடனேயே விட்டு விட வேண்டும். அதே சமயம் அவர், "ஆம்! நிச்சயமாக நீ போகலாம். நானும் உன்னுடன் கூட வருகிறேன்!" என்று பதிலளித்தால் அவர் ஒரு உண்மையான குரு! ஒரு குரு தன் சீடனை இன்னொரு உயர்ந்த குருவிடம் அனுப்பி அவரிடம் உபதேசம் பெறக் கூறினால் அவர் அநேகமாக ஒரு உத்தம மகா பாகவதராகத் தான் இருப்பார்.

அப்படிப்பட்ட ஒரு குருவை ஒரு போதும் கைவிடக் கூடாது. ஸ்ரீல நரோத்தம தாஸ தாக்கூரா ஸ்ரீல லோகநாத கோஸ்வாமியின் சீடராக இருந்தும், அவர், தான் ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியிடம் போய் உபதேசம் பெற வேண்டி ஸ்ரீல லோகநாத கோஸ்வாமியிடம் அனுமதி கேட்டார். அதே போல் ஸ்ரீல சியாமானந்த பிரபுவும் ஸ்ரீ ஹ்ருதய சைதன்யாவிடம் அனுமதி பெற்று ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியிடம் அடைக்கலம் அடைந்தார்.

மூன்று விதமான பக்தர்களால் சத்குருவாக செயல் பட முடியும். அவை: (1) பகவத் பார்ஷத தேக ப்ராப்த, (2) நிர்தூத காஷயா, (3) மூர்ச்சித்த காஷயா.

**(1) பகவத் பார்ஷத தேக ப்ராப்த:** தங்கள் ஜடவுடல்களை உதறிவிட்டு, பக்தி சாதனங்களால் தங்களுடைய சச்சிதானந்த மயமான ஆன்மீக சொரூபங்களைப் பெற்று, பகவானின் சகாக்களாக பக்தி சேவைகளைச் செய்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் உத்தம பாகவதர்களிலெல்லாம் மிகவும் மேலானவர்கள்.

**(2) நிர்தூத காஷயா:** பஞ்ச பூதங்களால் ஆன தங்கள் ஜடவுடல்களில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் கூட, உலக விஷயங்களில் எந்த விதமான ஆசைகளும் தங்கள் இதயங்களில் சிறிதும் இல்லாமலிருப்பவர்கள். அவர்கள் மத்திய தரமான உத்தம பாகவதர்களாகிறார்கள்.

**(3) மூர்ச்சித்த காஷயா:** பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு சேவைகள் செவ்வனே செய்து கொண்டிருந்தாலும், தன் இதயத்தில் இன்னமும் சிறிதளவாக சாத்வீகமான உலக ஆசைகள் தங்கியிருக்கும் பக்தர் இவர். தங்களது பக்தி சாதகங்களால் அந்த ஆசைகள் புதைந்தே தான் காணப்படும். பின்னர் ஒரு தக்க தருணம் வரும் போது, பகவான் அவர்களைத் தன் பாத கமலங்களிடம் இழுத்துக்

கொள்வதால் அந்த சிறு உலக ஆசைகளும் எரிந்து போகும். இந்த வகையான பக்தர்கள் கனிஷ்த உத்தம பாகவதர்களாகிறார்கள்.

# 4. ஸ்ரீகிருஷ்ணர் கூட குருவை ஏற்றுக் கொண்டார்

வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், முக்கியமாக ஸ்ரீமத்பாகவதம் இப்படி எங்கெங்கிலும் சத்குருவைப் பற்றி மிகவும் புகழப்பட்டுள்ளன. பகவானின் நாமங்கள் ஆன்மீக மகிமையுள்ளவைகள் என்பது உண்மை. சாஸ்திரங்கள் வாயிலாகவும், எத்தனை எத்தனையோ பேர்களிடமிருந்து ஹரிநாமங்களை ஜெபிக்க வேண்டி சொல்லக் கேட்டிருக்கிறோம். சிலர் கூறலாம், "ஓ, நான் இங்குமங்குமாக பல இடங்களில் ஹரி நாமங்களை ஜெபிக்க வேண்டுமென்று படித்திருக்கிறேன். எனவே தான் அவற்றை ஜெபிக்கிறேன், இதற்கெல்லாம் குரு எதற்காகத் தேவை? அவர் ஒரு பிரதிநிதியா, தரகரா, இல்லை தொடர்பு செய்பவரா? ஹரி நாமத்தை முதலிலிருந்தே தெரியாமல் இருந்தும் கூட, அஜாமிளன் எளிதாக வைகுந்தத்துக்குப் போகவில்லையா? எனவே நாமும் குருவின் துணையின்றி ஹரி நாமத்தை ஜெபிக்கலாம்."

ஒருவன் ஒரு குருவின் துணையின்றி ஹரிநாமத்தைத் தானாக ஜெபித்தானானால் என்ன விளைவு வரும்? அவன் பகவானின் நாமங்களின் மேல் அபராதமே உண்டு பண்ணுவான். அஜாமிளனைப் போல் ஜெபிப்பது மிகவும் அபூர்வமே. ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில் (மத்யலீலா 19.151) கீழ்க்காணும் சுலோகம் வருகிறது.

> பிரம்மாண்ட பிரமித்தே கோன பாக்யவான் ஜீவ
> குரு கிருஷ்ண பிரசாதே பாய பக்தி லதா பீஜ

"தங்களுடைய கர்மங்களின் காரணமாக, ஜீவன்கள் எல்லா அண்ட சராசரங்களிலும் திரிகின்றன. சில ஜீவாத்மாக்கள் மேலுலகங்களுக்கு உயர்த்தப் படுகின்றன. மற்றும் சில ஜீவாத்மாக்கள் கீழ் உலகங்களுக்குத் தாழ்த்தப் படுகின்றன. அவ்வாறு அலைந்து திரியும் ஜீவன்களில் கோடியில் ஒன்று அதிர்ஷ்ட வசமாக ஸ்ரீகிருஷ்ணரின் கருணையினால் ஒரு பரம்பரையில் வரும் குருவிடம் சேர்கிறது. அந்த ஜீவன் ஸ்ரீகிருஷ்ணரின் கருணையினாலும், குருதேவரின் கருணையினாலும் பக்தி சேவை என்ற கொடியின் வித்தைப் பெறுகிறான்."

சாஸ்திரங்களில் வரும், "குரு - ரூபி - கிருஷ்ணா" என்பதற்கு என்ன பொருள்? ஸ்ரீகிருஷ்ணரின் கருணை வடிவான குருதேவர் அளித்த

பக்தி விதையிலிருந்து, ஒருவனுக்கு பக்தி வளர ஆரம்பிக்கிறது. ஸ்ரீகிருஷ்ணர் பக்தி விதையை ஒருபோதும் நேரடியாகக் கொடுப்பதில்லை. அவர் ஒன்றிலோ ஸ்ரீகுரு வழியாக அதைக் கொடுக்கிறார். இல்லாவிடில் தானே குரு வடிவத்தில் தோன்றி அதைக் கொடுக்கிறார்.

ஒரு குருவிடம் சரணடையாமல் ஒருவன் ஜெபிக்கும் ஹரி நாமங்கள் ஆன்மீகத் தன்மை அல்லாதவைகள். அவை ஒருவனுக்கு உலக இன்பங்களையும், கூடிப் போனால் முக்தியையும் அளிக்கும். அதற்கு மேல் அது எதையுமேக் கொடுக்காது.

அஜமிளனுக்கு முதலில் குரு எவருமில்லை. அவர் தன் மகனுக்குப் பெயர் வைக்கும் நாம சம்ஸ்காரம் என்ற சமயச் சடங்கின் போது, பகவானின் ஒரு பெயரான நாராயணா என்ற பெயரை சூட்டினார். அவர் அப்போது வேத காலத்தில் வாழ்ந்து வந்ததால் தற்செயலாக நாராயணா என்ற பெயரை தன் மகனுக்கு சூட்டி, அப்போதே பகவானின் நாமத்தை நாம-ஆபாஷாவுடன் ஜெபிப்பதை ஆரம்பித்து வைத்திருந்தார். அது தான் அவரது முதலாவது நாம ஆபாஷா. அதன் பின்னர் நித்தமும், "ஓ நாராயணா! இங்கே வா, இங்கே வா!" என்றெல்லாம் அழைப்பார். அவர் இவ்வாறு தொடர்ந்து செய்து கொண்டிருந்ததால் அவரது நாம ஆபாஷாவும் தொடர்ந்தது.

பின்னர் அஜாமிளன் இறக்கும் போது, யம தூதர்களின் கொடூரமான உருவங்களைக் கண்டு பயந்து அலறியவாறு," நாராயணா" என்று தன் மகனின் பெயரைக் கூவி அழைத்தார். அவ்வளவு தான்! அந்தக் கணமே பரம இறைவனான ஸ்ரீநாராயணர், தன் நான்கு விஷ்ணு தூதர்களை உடனே அனுப்பி வைத்தார். அந்த நான்கு விஷ்ணு தூதர்களும் யமதூதர்களை விரட்டிய சம்பவத்தை அஜாமிளன் நன்றாகக் கேட்டார். மேலும் பகவானின் சுத்த நாமத்தை அந்த விஷ்ணு தூதர்களிடமிருந்து கேட்டதால் பக்தியின் வித்து அஜாமிளனின் இதயத்தில் இடப்பட்டது.

அவர் திரும்பவும் உயிர் பெற்று, "அந்த விஷ்ணு தூதர்களிடமிருந்து பெற்ற புனித நாமம் என்னே பெரும் சக்தி வாய்ந்தது! அதன் மகிமை என்னே உயர்ந்தது! ஆச்சரியமானது! நான் அந்த உயரிய மந்திரத்தைப் பெற்றதால் நான் உடனடியாக என் இந்த மனைவி, அந்த மனைவி, என் அனைத்துக் குழந்தைகள், என் செல்வங்கள் அனைத்தையும் இப்போதே விட்டு விடுகிறேன்!" என்று உறுதி எடுத்தார். எல்லாவற்றையும் துறந்து விட்டு ஹரித்வாரத்துக்குச் சென்று, அங்கே கங்கையில் குளித்தார். அதன் கரையோரத்தில் உட்கார்ந்து கொண்டு ஹரி நாமங்களை ஜெபித்தார். சீக்கிரமாகவே அவர் சுத்த நாமத்தை ஜெபிக்கவும் ஆரம்பித்தார்.

கொஞ்ச நாட்களுக்குப் பின்னர், அதே விஷ்ணு தூதர்கள் அஜாமிளனிடம் வந்தார்கள். "நீவிர் இப்போது எங்களுடன் வரலாம். இந்த விமானத்தில் ஏற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். இப்போது அஜாமிளனுக்கு பாவ பக்தி என்ற நிலையையும் அதன்பின் பிரேமை என்ற நிலையையும் கூட எட்டியிருந்தார். "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரத்தைத் தொடர்ந்து ஜெபித்ததனால் அவருக்கு வைகுந்த-ரதி வந்திருந்தது. ஆனால் அவரது ரதி, பிருந்தாவன-ரதியான மாதுர்ய-மயி பிரேமை அல்ல. பகவானிடம் அவருக்கு ஐஸ்வர்ய-மயி பிரேமையே நிறைந்திருந்தது.

அஜமிளன் விஷ்ணு தூதர்களிடம் கேட்டார், "அன்று நீங்கள் யம தூதர்களை எல்லாம் துரத்தி விரட்டிய போது, நான் உங்களிடம் பேசவும் உங்கள் பாதங்களைத் தொடுவதற்கும் ஆசைப்பட்டேன். ஆனால் நீங்கள் உடனே மறைந்து விட்டீர்கள். ஆனால் இப்போதோ நான் உங்களுடன் கூட வர வேண்டுமென்று அழைக்கிறீர்கள். அதெப்படி என்று எனக்குப் புரியவேயில்லை."

அதற்கு விஷ்ணு தூதர்கள் பதிலளித்தனர், "நாங்கள் அப்போது உமக்கு சுத்த நாமத்தின் வித்தை அளித்து, பக்தி-லதா என்ற கொடிக்கு வித்திட்டோம். அதன்பின் தினமும் கங்கையில் குளித்துக் கொண்டு ஜெபித்ததால் நீவிர் பரிசுத்தமாக ஆகிவிட்டீர். வைகுந்த-ரதி கிடைக்கப் பெற்று வைகுந்தத்துக்கு வரும் தகுதியையும் பெற்றீர்." அதன் பின் அஜாமிளனை அந்த விஷ்ணு தூதர்கள் தன்னுடன் கூட்டிச் சென்றனர்.

விஷ்ணு தூதர்கள் அஜாமிளனின் முன்னால் இரண்டாவது தடவை தோன்றிய போது, அவர் உலக ஆசைகள் அனைத்தையும் அறவே விட்டிருந்தார். ஆனால் துருவ மகாராஜாவின் சரித்திரத்தில், அவர் ஸ்ரீநாரத முனிவரின் சீடராக இருந்தும் கூட அவருக்குத் தன் தாயார் மேல் சிறிது பற்று இருந்தது. அந்தக் காரணத்தால் தான் அவரால் மகத்-தத்வா என்ற இந்த அனைத்து ஜடவுலகங்களுக்கும் அப்பாலிருக்கும் வைகுந்தத்துக்குச் செல்ல இயலவில்லை. மாறாக அவர் இந்த பிரம்மாண்டத்திற்குள்ளிருக்கும் ராம-பிரிய வைகுந்தத்துக்கு அருகிலிருக்கும் துருவ லோகத்துக்கே தான் சென்றார்.

வால்மீகி முனிவரும் கூட நாரத முனிவரின் சீடர். நாரத முனிவரை சந்திப்பதற்கு முன்னர் அவர் ஒரு வழிப்பறி கொள்ளைக்காரனாக இருந்தார். அவர் இலட்சக் கணக்கான பிராமணர்களையும் தபசிகளையும் கொன்று அவர்களுடைய பொருட்களையெல்லாம் கொள்ளை அடித்துள்ளார். நாரத முனிவர் அவரைச் சந்தித்து பகவானின் மகிமைகளை யெல்லாம் போதித்தார். "நீ இங்கேயே உட்கார். நான் உனக்குப் பகவானின் சுத்த நாமத்தின் வித்தைக்

கொடுக்கிறேன். நீ 'ராமா' என்ற நாமத்தை ஜெபிக்க வேண்டும்", என்று கட்டளையிட்டார். வால்மீகிக்கு ராம நாமத்தை ஜெபிக்கத் தகுதியில்லாமல் இருந்ததை அறிந்த நாரதர், "உன்னால் ராம நாமத்தை ஜெபிக்க முடியவில்லை யென்றால் 'மரா, மரா, மரா (சாவு, சாவு, சாவு)' என்று தொடர்ந்து சொல் என்று கட்டளையிட்டார். அதற்கு வால்மீகி, "ஓ, அதை என்னால் ஜெபிக்க முடியும்" என்று சம்மதித்து "மரா மரா" எனத் தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தார். அவர் நாரத முனிவரின் சீடரானதால் இப்படி ஒரு சலுகையைப் பெற முடிந்தது.

அதன்பின் ஸ்ரீவால்மீகி என்ன ஆனார்? ஆயிரக் கணக்கான வருடங்கள் இப்படி "மரா மரா" என்று ஜெபித்த பின், அது ராமா, ராமா என்று மாறி ஒலித்தது. அவரே பின்னர் ஸ்ரீராமரின் சரித்திரத்தை எழுதும் அளவுக்குத் தகுதியடைந்தார். ஸ்ரீராமரின் லீலைகள் அனைத்தையும் தன் சமாதி நிலை மூலமாகக் கண்டார். ஸ்ரீவேத வியாசரால் எவ்வாறு ஸ்ரீமத்பாகவதம் சமாதி-பாஷ்யா என்ற சமாதி மொழி மூலம் எழுதப்பட்டதோ, அதே போல் தான் ஸ்ரீவால்மீகியினால் இராமாயணம் எழுதப்பட்டது. தன் சமாதி நிலையில், ஸ்ரீராமர் தோன்றுவதற்கு முன்பாகவே அவரது லீலைகள் அனைத்தும் அவருக்குத் தோன்றின. இவ்வாறே அவர் தன் ஸ்ரீவால்மீகி இராமாயணத்தை எழுதினார்.

குருவின் அனுக்கிரகம் இல்லாவிடில் ஒருவன் ஜடவுலக இன்பங்களில் சிக்கிப் புனித ஹரிநாமத்துக்கு நாம-அபராதத்தையே விளைவிக்க வைக்கும் என்பதை முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டும். ஒருவனுக்கு ஸ்ரீகிருஷ்ணரிடமுள்ள பரஸ்பர தொடர்பை உண்டு பண்ண வைக்கும் பக்தி விதையை ஒரு சுத்தமான குருவிடமிருந்து அவன் பெறவில்லையானால் அதில் ஆன்மீக வஸ்துவான சப்த பிரம்மா ஒருபோதும் இருக்காது. எனவே ஒரு குருவை ஏற்று அவரிடம் சரணடைவது மிகவும் முக்கியமாகும். ஸ்ரீகிருஷ்ணர் பரம இறைவனாக இருந்தும், அவர் கூட ஒரு குருவை ஏற்றுக் கொண்டார். ஒரு சமயம் கோபியர்கள் ஸ்ரீகிருஷ்ணரைக் கிண்டல் செய்தார்கள், "உமக்கு ஒரு குருவுமே கிடையாது!" என்று. அதற்குப் பதிலாக ஸ்ரீ கிருஷ்ணர், "யார் சொன்னார்கள்? என் குரு பாகுரி ரிஷி!" என்றார்.

ஸ்ரீகிருஷ்ணரின் குரு சாந்திபனி முனி என்பது பொதுவான ஜனங்கள் அறிந்தது. ஆனால் உண்மையில் சாந்திபனி முனிவர் ஒரு ஆசிரியரைப் போல் தான். அவர் ஸ்ரீகிருஷ்ணருக்கு 64 கலைகளையும் படிப்பித்தார். எனவே அவர் ஒரு பள்ளி ஆசிரியர் போன்றவர். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீராதா மந்திரத்தைப் பாகுரி ரிஷியிடமிருந்து பெற்றதால் அவர் தான் உண்மையில் ஸ்ரீகிருஷ்ணரின் குரு.

ஸ்ரீகிருஷ்ணரோ அவரது அவதாரங்களோ இவ்வுலகத்தில் எப்போது தோன்றினாலும், அவர்கள் அனைவரும் குருவை ஏற்றுக் கொள்வார்கள். ஸ்ரீகிருஷ்ணரின் அவதாரமான ஸ்ரீசைதன்ய மகாபிரபுவும் ஹரிநாமத்தையும் கோபால மந்திரத்தையும் ஈஸ்வரபூரி பாதாவிடமிருந்து பெற்றுக் கொண்டார். மேலும், அவர் பிரகாஷானந்த சரஸ்வதி, "வேதாந்தத்தைப் படிப்பதற்குப் பதிலாக ஹரிநாம சங்கீர்த்தனத்தை ஏன் செய்கிறீர்?" என்று கேட்டதற்குக் கீழ் வரும் காரணத்தைப் பதிலாக அளித்தார்:

பிரபு கஹே - சுன, ஸ்ரீ பாத இஹார காரண
குரு மோரே மூர்க்க தேக்கி கரில சாசன
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - ஆதி. 7.71)

"ஸ்ரீசைதன்ய மகாபிரபு பிரகாஷானந்த சரஸ்வதிக்குப் பதிலளித்தார். 'என் அன்புள்ள ஐயா! தயவு செய்து அதன் காரணத்தைக் கேளுங்கள். என் குருதேவர் என்னை ஒரு முட்டாள் என்று எண்ணி என்னை அடித்துத் திருத்தினார்.'"

மூர்க்க துமி, தொமாரா நாஹிக வேதாந்ததிகார
கிருஷ்ண மந்த்ர ஜெப சதா, - எயி மந்த்ர சார
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - ஆதி 7.72)

"என்னிடம் அவர், 'நீ ஒரு முட்டாள். உனக்கு வேதாந்தங்களைப் படிக்கத் தகுதியே இல்லை. எனவே நீ எப்போதும் ஸ்ரீகிருஷ்ணரின் புனித நாமங்களை ஜெபம் செய். அதுவே எல்லா மந்திரங்களிலும், வேதங்கள் அனைத்திலுமுள்ள சாரம்.' என்று கூறினார்."

இதை இங்கு நன்றாகப் புரிய வேண்டும். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் குருதேவர், "உனக்கு வேதாந்த கோட்பாடுகளில் நுழைவதற்கு எந்த விதமான தகுதியுமே இல்லை. நீ ஒரு முட்டாள். அறிவிலி. எனவே நீ ஹரிநாமத்தை மட்டும் ஜெபித்தால் போதும்" என்று போதித்ததாகக் கூறினார்.

ஹரேர் நாம ஹரேர் நாம
ஹரேர் நாமைய்வ கேவலம்
கலௌ நாஸ்தி ஏவ நாஸ்தி ஏவ
நாஸ்தி ஏவ கதிர் அன்யதா
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம்- ஆதி 17.21)

"சண்டை சச்சரவுகளும் வெளி வேடங்களும் நிறைந்த இந்த கலியுகத்தில், மோட்சத்திற்கான ஒரே வழி பகவானின் புனித நாமங்களை ஜெபிப்பது மட்டுமே. வேறு எந்த வழியும் இல்லை. வேறு எந்த வழியும் இல்லை. வேறு எந்த வழியும் இல்லை."

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு அவரது குருதேவர் எந்த மந்திரத்தைக் கொடுத்தார்? அளவற்ற மகிமைகளையும் சக்திகளையும் கொண்ட ஸ்ரீகிருஷ்ண மந்திரமான மகா மந்திரத்தை அவர் கொடுத்தார்:

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம, ராம ஹரே ஹரே

ஆனால் ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஏன் தனது சன்னியாச குருவான ஸ்ரீகேசவ பாரதியின் பெயரைக் குறிப்பிடவேயில்லை? எல்லாவற்றையும் துறந்து விட்டு சன்னியாசம் கொள்வது ஒரு சிறு விஷயமல்ல. அது ஹரி நாமமோ, தீட்சையோ எடுப்பதை விடக் குறைந்தது அல்ல. ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன் சன்னியாச குருவின் பெயரைக் குறிப்பிடாததற்குக் காரணம் என்னவென்றால், இந்த மந்திரத்தை ஸ்ரீசைதன்ய மகாபிரபு தான் முதலில் ஸ்ரீகேசவ பாரதியின் காதில் ஓதி, அதன் பின் ஸ்ரீகேசவ பாரதி அதை மகாபிரபுவின் காதில் ஓதினார்.

எனவே ஸ்ரீசைதன்ய மகாபிரபு பிரகாஷானந்த சரஸ்வதியிடம் ஸ்ரீஈஸ்வர பூரியின் பெயரை மட்டுமே கூறி, ஸ்ரீஈஸ்வர பூரி அளித்த மந்திரமே மகாபிரபுவை பித்தனாக்கி விட்டது என்று கூறினார். இவ்வாறு அவர் நடத்திய நர லீலைகள் மூலமாக ஸ்ரீஈஸ்வர பூரிபாதா இந்த மந்திரங்களைக் கொடுக்காமலிருந்தால் இந்த மாதிரியான விளைவுகள் நடந்திருக்க முடியாது. மகாபிரபு ஸ்ரீகிருஷ்ணரிடம் இவ்வளவு தூரம் பிணைப்பையும் கொண்டிருக்க மாட்டார். அதே போல் அவர் பிரேம ரசத்தையும் அவ்வளவு தூரம் சுவைத்திருக்க மாட்டார். நாம் இந்த உண்மைகள் அனைத்தையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

# 5. ஸ்ரீகுரு இறைவனை விடவும் கனமானவர்

வெகு சீக்கிரமே, இரண்டொரு வருடங்களில், ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜா உலகெங்கிலும் பிரச்சாரம் செய்தார் - மலைப் பிரதேசங்கள், கடல் தீவுகள், வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு இப்படி எங்கிலும் பிரச்சாரம் செய்தார். நான் அவரது மகிமைகளை எங்கிலும் காண்கிறேன்.

ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜா உண்மையில் நமது குரு பரம்பரையின் பிரதி நிதியாக வந்திருந்தாலும் சில மக்கள் அவரை மட்டுமே எப்போதும் குருவாக இருக்க வேண்டி விரும்பினர். அவர்கள் தங்கள் கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் அனைத்திலும் அவரையே ஒரே குருவாக வேண்டினர். நம் குரு பரம்பரையைப் புறக்கணித்தார்கள். இது மிகவும் மோசமானது; நாம் அவ்வாறு இருக்கக் கூடாது. மாறாக நாம், குரு தத்துவ மென்றால் என்ன என்பதை தெரிந்திருக்க வேண்டும்.

குரு என்றால் "கனம்" என்று பொருள். அதாவது இந்த உலகத்தின் எதையும் விட அவர் கனமானவர். ஸ்ரீகிருஷ்ணரை விடவும் குரு கனமானவர். சில சமயங்களில் ஸ்ரீகிருஷ்ணர் கூட குருவிடம் வந்து அவரது பாத தூளியையும் எடுக்கலாம். ஸ்ரீகீத கோவிந்தம் என்ற நூலில் ஸ்ரீல ஜெயதேவ கோஸ்வாமி, ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீமதி ராதிகாவிடம், "தேகி பத பல்லவம் உதாரம் - தயவு செய்து கருணையுடன் உன் தாமரைப் பாதங்களை என் தலைமேல் வை. என்னிடம் தயவு கொள்" என்று கேட்டதை எழுதியிருக்கிறார்.

இதையே ஸ்ரீகிருஷ்ணர், தனக்கு நேரடி சேவை செய்கிறவர்களை விடவும், ஸ்ரீமதி ராதிகாவுக்கு சேவை புரியும் கோபிகளிடமும் கேட்கிறார். ஸ்ரீகிருஷ்ணர் அவர்களிடம் வணங்குகிறார்: "தயவு செய்து உங்கள் காலடி தூசியை என் தலையின் மேல் வையுங்கள்" என்று! இதுவே குரு தத்துவம்!

இதை வேறு விதமாகக் கூறப் போனால், ஸ்ரீல ரூப கோஸ்வாமியின் பரம்பரையில் வந்த பரிசுத்தமான அனைத்துக் குருக்களுமே தங்கள் நிரந்தர ரூபங்களில் ஸ்ரீமதி ராதா ராணிக்குப் பணி விடை செய்யும் மஞ்சரிகளே. பக்தி சாஸ்திரங்களின் சாரமே குரு தத்துவம் தான். இந்தத் தத்துவம் மிகவும் கனமானது. எனவே நீங்கள் இதை உங்கள் உள்ளிதயத்துடன் கேட்க வேண்டும். ஒருவன் தன் குருவை வழிபட்ட பின்னரே தான் ஸ்ரீகிருஷ்ணரை வழிபட முடியும்.

இவ்வுலகிலுள்ள நாம் அனைவரும் ஸ்ரீகிருஷ்ணரிடம் நம் புறமுதுகைக் காட்டிவிட்டு வந்திருக்கிறோம். இதை நாம் ஒத்துக் கொள்கிறோமோ இல்லையோ, ஆனால் அதுதான் உண்மை. நாம் இவ்வுலகில் மிகவும் வேதனைப் படுகிறோம். ஆனால் அதை நாம் உணராமலே இருக்கிறோம். எப்படி? நாம் மாயா என்ற மதுவை அளவின்றி உண்டு முழுவதுமாகப் பைத்தியமாகியிருக்கிறோம். அந்தப் பைத்தியத்தில் நாம் இங்கு மிகவும் ஆனந்தமாக இருப்பதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு நாள், உங்கள் உடல், மற்றும் இவ்வுலகத்தில் நீங்கள் சேர்த்து வைத்திருந்த அத்தனையையும் விட்டு விட வேண்டியது கண்டிப்பாக வரும் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். கண்டிப்பாக ஒரு நாள் நீங்கள் முதுமை அடைந்து விடுவீர்கள். முதுமை உங்களை எப்போது பிடித்துக் கொள்ளலாம் என்று மிகவும் ஆர்வமாகக் காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் எவரும் அதிலிருந்து தப்பவே முடியாது. ஸ்ரீநாரத முனிவர் போன்ற பெரும் பக்தர்கள் மாயையிலிருந்தும் அதன் ஒரு தோற்றமான முதுமையிலிருந்தும் தப்பிக்க முடியும். ஆனால் நீங்கள் நாரத முனிவரைப் போலல்லவே. நீங்கள் கவனமில்லாவிட்டால் இப்படித் தான் வேதனைப்பட வேண்டி வரும்.

வேதத்தில் கீழ்க்கண்ட சுலோகம் வருகிறது

யஸ்ய தேவே பரா பக்திர்
யதா தேவே ததா குரவ்
தஸ்யைதே கதிதா ஹை அர்த்தாஹ
ப்ரகாஷன்தே மஹாத்மனஹ
(ஸ்வேதாஷ்வதர உபநிஷத் 6.23)

"இறைவனிடமும் குருவிடமும் உண்மையான முழு நம்பிக்கை வைத்திருக்கும் மகா ஜீவன்களுக்கு மட்டுமே வேதங்களின் ஞானங்கள் அளிக்கப்படும்."

இந்த உபதேசம் தொன்று தொட்டே வழங்கப்படுபவை: "யஸ்ப தேவே பரா பக்திர்". இந்த உலகத்தில் தற்போது அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் எவரொருவர் இனிமேல் இவ்வுலகிலும் மறு உலகங்களிலும் ஆனந்தமாக இருக்க விரும்புகிறாரோ அவர் குறிப்பாக இந்தச் சச்சரவுகளும் பாசாங்குகளும் நிறைந்த கலியுகத்தில் பரம இறைவனான ஸ்ரீகிருஷ்ணருக்குச் சேவை செய்ய வேண்டும். அதே போல், கொஞ்சமும் குறைவின்றி தகுந்த பரம்பரையில் வரும் குருதேவருக்கும் சேவைகள் புரிய வேண்டும். இந்தச் சுலோகத்தில் "பரா பக்தி" என்ற சொல் உபயோகப் படுத்தப் பட்டுள்ளது. எனவே நாம் அதன் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்யாபிலாஷித சூன்யம்
ஞான கர்மாதி அனாவ்ருதம்
ஆனு கூல்யேன கிருஷ்ணானு
சீலனம் பக்தி உத்தமா
(பக்தி ரசாம்ருத சிந்து 1.1.11)

"ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதை மட்டுமே ஒரே குறிக்கோளாகக் கொண்டு தன் உடல், மனம், வாக்கு அனைத்தையும் இடைவிடாமல் தொடர்ந்து ஸ்ரீகிருஷ்ணருக்கு பக்தி பாவங்களுடன் தன்னை ஈடுபடுத்தி, ஞானம், கருமம் இவை எதுவும் கொஞ்சம் கூட மூடப்படாமல் சேவை செய்வதே உத்தம பக்தி. இதில் எந்த விதமான சுயநலங்களுக்கும் இடமேயில்லை."

எந்த வித தடங்கலும் இல்லாமல் இடைவிடாமல் தன் உடல், மனம், வாக்கு அனைத்தையும் பக்திப் பாவங்களுடன், ஸ்ரீகிருஷ்ணருக்காக மட்டுமே செயல்பட வைப்பதே பராபக்தியாகும். அந்தச் செயல்களில், மன ஆராய்ச்சிகள், அறிவு போன்றவற்றால் அடையப் பெறும் ஞானத்துக்கோ; புண்ணியங்களைச் செய்து அதன் மூலம் சொர்க்கங்களை அனுபவிக்க வைக்கும் கர்மங்களுக்கோ, இடமேயில்லை. மேலும் பராபக்தி குரு தத்துவத்தின் உதவியால் வருவது. மேல் குறிப்பிடப்பட்ட எல்லா அடையாளமுமில்லாமல், ஒரு சில அடையாளங்கள் மட்டும் இருந்தால் அதை வேண்டுமானால் வெறுமனே பக்தி என்று கூறலாமே தவிர, பராபக்தி என்று கூற முடியாது.

வேதங்கள் பராபக்தியை ஸ்ரீகிருஷ்ணரிடம் மட்டுமே செலுத்த வேண்டும் என்று கூறுகின்றன. ஆனால் அதற்கு முன், முதலாக குருவிடம் அதைச் செலுத்த வேண்டும் என்றும் கூறுகின்றன. ஒருவனுக்கு குரு இல்லாவிட்டால் அவனது பக்தி சாதகங்கள் அனைத்தும் பூஜ்யமே. அவனுக்குப் பூலோக பலன்கள் மட்டும் தான் கிடைக்கும்.

ஒருவன், "நான் ஏற்கெனவே இறைவனின் நாமங்களை ஜெபிக்கிறேன், ஞாபகத்தில் எப்போதும் கொள்கிறேன், அர்ச்சனைகள் செய்கிறேன்" என்று நினைத்தாலும், அவன் முறையான ஒரு குருவிடம் தீட்சை பெறவில்லையென்றால் அவனுக்கு அவை வெறும் உலக சம்பந்தமான பலன்களையே அளிக்கும். உலக, மற்றும் இந்திரிய சுகங்களின் போதையுடன் வாழும் அவன், தன்னை மிகவும் மகிழ்ச்சி யுடையவன் என்று எண்ணலாம். ஆனால் அவன் உண்மையில் மகிழ்ச்சியானவனே அல்ல. எனவே தான் சாஸ்திரங்களில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

பிரம்மாண்ட பிரமித்தே கோன பாக்யவான் ஜீவ
குரு - கிருஷ்ண பிரசாதே பாய பக்தி-லதா- பீஜா
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம்- மத்ய 19. 151)

"தங்களுடைய கர்மங்களின் படி, ஜீவன்கள் எல்லா அண்ட சராசரங்களிலும் திரிகின்றன. சில ஜீவாத்மாக்கள் மேலுலகங்களுக்கு உயர்த்தப் படுகின்றன. மற்றும் சில ஜீவாத்மாக்கள் கீழ் உலகங்களுக்கு தாழ்த்தப் படுகின்றன. அவ்வாறு அலைந்து திரியும் ஜீவன்களில் கோடியில் ஒன்று அதிர்ஷ்ட வசமாக ஸ்ரீகிருஷ்ணரின் கருணையினால் ஒரு பரம்பரையில் வரும் குருவிடம் சேர்கிறது. அந்த ஜீவன் ஸ்ரீகிருஷ்ணரின் கருணையினாலும், குருதேவரின் கருணையினாலும் பக்தி சேவை என்ற கொடியின் வித்தைப் பெறுகிறான்."

"குரு-கிருஷ்ண-பிரசாதே" என்றால் என்ன பொருள்? "பக்தி-லதா-பீஜ" என்ற பராபக்தியின் வித்தை குருவின் கருணையும், ஸ்ரீகிருஷ்ணரின் கருணையும் சேர்வதால் ஒருவன் கிடைக்கப் பெறுகிறான் என்பது இதன் பொதுவான பொருள். ஆனால் இதில் இன்னொரு பொருளும் அடங்கியுள்ளது. அது என்னவென்றால், ஸ்ரீகிருஷ்ணரின் ஒரு வடிவமே குருவாகும். ஸ்ரீகிருஷ்ணர் நேரடியாக நம்மிடம் வருவதில்லை. ஆனால் ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜா உலகெங்கும் சென்றதைப் போல் குருக்கள் நம்மைத் தேடி வருவார்கள்.

ஸ்ரீகிருஷ்ணரின் கருணையே குரு வடிவமாகத் தோன்றுகிறது என்பதை நாம் அறிந்துணர வேண்டும். இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணரின் ஆஷ்ரயா - விக்ரக வடிவமான குருவிடமிருந்தே நாம் பக்தியின் வித்தைப் பெறுகிறோம். அந்தப் பக்தியின் விதையென்ன? ஸ்ரீகிருஷ்ணருக்குச் சேவை செய்யும் ஆவலே அது - "கிருஷ்ண-சேவா-வாஸனா". அந்த ஆவல், உண்மையில் பரம்பரையாக வைஷ்ணவ சம்பிரதாயத்தில் வரும் குரு தேவரிடமிருந்து வருகிறது. அந்த குரு திக்ச-குருவாகவோ, சிக்ச-குருவாகவோ இருக்கலாம். மேலும் அந்தக் குரு, வேறொரு குருவிடம் சிக்சை பெற்ற ஒரு சீடனுக்கும் சிக்ச குருவாக இருக்கலாம். பக்தி விருட்சத்தின் வித்தை இவ்வாறு ஒரு உயர்ந்த நிலையிலுள்ள குருதேவரால் தான் கொடுக்க இயலும். இதனால் தான் சாஸ்திரம் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

யஸ்ய தேவே பரா பக்திர்
யதா தேவே ததா குரவ்
தஸ்யைதே கதித ஹை அர்த்தாஹ
பிரகாஷந்தே மஹாத் மனஹ

ஸ்ரீகிருஷ்ணர் யார் என்பதை ஒருவன் குரு தேவரிடமிருந்து மட்டும் தான் உண்மையில் அறிய முடியும். அதுவும் அந்தக் குரு ஒரு முறையான குரு பரம்பரையின் வழியாக வரவில்லையென்றால் ஸ்ரீகிருஷ்ணரை அவர் அறிய முடியாது.

ஸ்ரீ பக்தி ரசாம்ருத சிந்துவில் குறிப்பிடப்பட்டுள்ள பக்தியின் 64 அங்கங்களில் முதல் நான்கு அங்கங்களும் ஸ்ரீகுருதேவர் சம்பந்தப் பட்டவைகளே. முதலாவது அங்கம் "குரு - பாதாஷ்ரயா" - அதாவது குருவின் பாதக் கமலங்களில் சரணடைவதே. அது சிரவணம் என்ற கேட்டல் மூலமாக வருவது. ஒரு வகையில் அதுவே "ஹரி நாம தீட்சை" ஆகும். அப்படிப்பட்ட ஒரு குருவிடம் சரணடையும் போது ஒருவன் பக்தியில் மிகவும் சீக்கிரமாக முன்னேறுகிறான். குரு-பாதாஷ்ரயாவின் பின்னர் வருபவை தீட்சையும் சிக்சையும்.

தீட்சை என்றால் தொடங்கி வைத்தல், சிக்சை என்றால் உபதேசங்கள் என்று பொருள். ஒரு சீடன் குருதேவர் உபதேசிப்பதை அப்போது தான் புரிந்து கொள்ள ஆரம்பிப்பான். அதன்பின் அவற்றை நடை முறையில் பின்பற்ற முயலுவான். நீங்கள் அனைவரும் அப்படி ஒரு குருவிடம் தீட்சை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் மிகவும் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும். குரு பரம்பரையில் வந்த தகுந்த குருவாக இருந்தும். உங்களுக்கு அவரின் குணத்திலோ, அவரது உபதேசங்களின் பேரிலோ சந்தேகம் எழுந்தால் ஸ்ரீகிருஷ்ணர் உங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

யஸ்ய பிரசாதாத் பகவத் பிரசாதோ
யஸ்யா பிரசாதான் ந கதி குதோ அபி
த்யாயம் ஸ்துவம் தஸ்ய யஸஸ் த்ரி சந்த்யம்
வந்தே குரோஹ் ஸ்ரீ சரணார விந்தம்

"ஸ்ரீகுருதேவரின் ஒரே கருணையினால் தான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணை கிடைக்கிறது. அவரது கருணையின்றி உயிர் ஜீவன்கள் எந்த விதமான முன்னேற்றமோ, முக்தியோ பெற இயலாது. நான் ஸ்ரீகுருதேவரின் மகிமைகளைத் தினமும் மூன்று தடவைகள் தியானித்து இந்த ஸ்தவ ஸ்துதியை அவரது பாதக் கமலங்களில் துதிக்கிறேன்."

அஞ்ஞஸ் சாஸ்ரத்ததானாஸ் ச
ஸம்ஸ யாத்மா வினஸ்யதி
நாயம் லோகோ அஸ்தி ந பரோ
ந சுக்கம் ஸம்ஸ யாத்மனஹ (பகவத் கீதை: 4.40)

"வெளிப் படுத்தப் பட்ட சாஸ்திரங்களில் சந்தேகம் கொள்ளும் நம்பிக்கையில்லாத அறிவிலி, இறைவனின் நெருக்கத்தை ஒருபோதும் அடைய மாட்டான். அப்படிச் சந்தேகம் கொள்பவனுக்கு இந்த உலகத்திலோ அடுத்த உலகத்திலோ ஒருபோதும் மகிழ்ச்சியேயில்லை."

உதாரணமாக ஒரு உண்மையான பரம்பரையில் வந்த குரு, பிரச்சாரம் செய்தும் தன் குருதேவருக்கு சேவை செய்தும் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரை யாராவது ஒரு சீடன், "என் குருதேவர் ஒரு சாதாரண மனிதர். அவருக்கு எதுவும் தெரியாது" என்றோ அல்லது, "சாதாரண விஷயங்களில் எனக்கு அவரை விடவும் அதிகம் தெரியும்" என்றோ எண்ணினால் அவன் ஸ்ரீகிருஷ்ண பக்தியிலிருந்து கீழே விழுவான். அது மட்டுமல்ல, அவனை எவராலும் காப்பாற்றவும் முடியாது. அப்படிப் பட்டவர்களிடம் நாம் ஒருபோதும் தொடர்பு வைத்துக் கொள்ளலாகாது. மேலும் அப்படிப்பட்ட நபரிடம் நெருக்கம் வைத்திருக்கும் இன்னொரு நபரிடமும் நாம் தொடர்பு வைக்கக் கூடாது. அவர்களை நீங்கள் மலம் கழிப்பதைப் போல் கழித்து விட்டு விட வேண்டும். நாம் எளிதாக மலம் கழிக்கும் போது நமக்கு நன்றாக இருக்கிறது. கழித்த பின் பெரும் திருப்தி உண்டாகிறது. ஆனால் அதே மலம் நம் உடலில் போகாமல் தங்கியிருக்கும் போது அமைதியின்றி சிரமப் படுகிறோம். நம்மால் பக்தி சாதகங்களையோ வேறு எதுவும் கூட செய்ய இயலுவதில்லை. அதேபோல் கெட்ட தொடர்புகளை உங்கள் வாழ் நாட்கள் முழுவதும் விட்டு விட வேண்டும்.

உங்களுக்கு கிருஷ்ண பக்தி வேண்டுமானால், முறையான பரம்பரையில் தோன்றி, தன் குருதேவருக்குச் சேவை செய்து உலகமெங்கும் சென்று பிரச்சாரம் செய்து வரும் ஒரு சுத்தமான குருவைச் சந்தேகப்படும் நபர்களிடம் ஒருபோதும் தொடர்பு வைக்கலாகாது. பரம பூஜ்யபாத ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி மகாராஜாவுக்கு ஆயிரக்கணக்கான சீடர்கள் இருந்தார்கள். ஆனால் ஏராளமானவர்கள் இதே மாதிரியான சந்தேகங்களின் காரணமாக கிருஷ்ண பக்தி மார்க்கத்தையே முழுவதுமாக விட்டு விட்டார்கள்.

நீங்கள் ஒரு வேளை துரோணாச்சாரியாரையும் ஏகலைவனையும் பற்றிக் கேட்டிருப்பீர்கள். அவர்கள் இருவரும் 5,000 வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீகிருஷ்ணர் இவ்வுலகத்தில் லீலைகள் புரிந்த சமயம் வாழ்ந்தவர்கள். ஏகலைவன் துரோணாச்சாரியாரிடம் சென்று, "நான் உங்களை என் குருவாக ஏற்றுக் கொள்கிறேன்" என்று கேட்டான். அதற்கு துரோணாச்சாரியார், "நீ என்னிடம் வருவாய் என்று முன்னமேயே தெரியும். எனக்கு உன் இதயத்தையும் அதன் துடிப்பையும் நன்றாகவேத் தெரியும். அவை அனைத்தும்

சுத்த பக்தர்களுக்கு எதிரானவை. எனவே நான் உனக்கு வில் வித்தையை ஒருபோதும் கற்பிக்க மாட்டேன்" என்று மறுத்து விட்டார். ஏகலைவன் மீண்டும் கேட்டான், "நான் உங்களை என் குருவாக ஏற்றுக் கொண்டதால் நான் எப்படியாவது உங்களிடமிருந்து வில் வித்தையைக் கற்றே ஆக வேண்டும்" என்று வாதித்தான். துரோணாச்சாரியார் திரும்பவும் மறுத்தார். "நான் உனக்கு அவற்றைக் கற்பிக்கவே கூடாது. நீ வில்வித்தையைக் கற்றால் அது இந்த முழு உலகத்திற்கும் பெரும் சுமையாகி விடும்" என்றார்.

துரோணாச்சாரியார் இவ்வாறு மறுத்த போதிலும், ஏகலைவன் மனம் தளராமல் காட்டுக்குள் சென்று களிமண்ணினால் துரோணாச்சாரியாரின் சிலையைச் செய்தான். அந்தச் சிலைக்கு அவன் தினமும் வந்தனம் செய்து, அதன் காலிலுள்ள தூசிகளை ஏற்றுக் கொண்டு மிகவும் நம்பிக்கையுடன் வில்வித்தையைக் கற்க ஆரம்பித்தான். தவறாமல் அர்ச்சனைகளையும் பூக்களையும் துரோணாச் சாரியாருக்குச் சமர்ப்பித்துக் கொண்டு, வில் வித்தையையும் கற்று அதில் பெரும் திறமையும் பெற்று விட்டான்.

ஒரு நாள் காட்டில் அந்த வழியாக துரோணாச்சாரியார் சென்ற போது, அவர் ஏகலைவனின் திறமையைக் கண்டு, "இந்த உயர் தரமான வில்வித்தையை இவன் எப்படிக் கற்றான்?" என்று மிகவும் ஆச்சரியமடைந்தார். ஏகலைவன் துரோணாச்சாரியாரைக் கண்டதும் அவரது பாத கமலங்களில் விழுந்து, "நான் இவை அனைத்தையும் உங்களிடமிருந்தே கற்றேன்" என்று கூறினான். அதற்குத் துரோணாச்சாரியார், "நீ உண்மையிலேயே இவை அனைத்தையும் என்னிடமிருந்து கற்றாயானால் நீ எனக்கு குரு தட்சிணை தர வேண்டும்" என்று கேட்டார். ஏகலைவன் உடனே பதிலாக, "தாங்கள் என்ன வேண்டுமென்றாலும் கேளுங்கள். நான் கொடுக்கிறேன். என் உயிரை வேண்டுமானாலும் கூட நான் தங்களுக்குக் கொடுக்கத் தயார்" என்றான். அதற்கு துரோணாச்சாரியார், "எனக்கு உன் வலது கை பெருவிரல் வேண்டும்" என்று கேட்டார். உங்களிடம் உங்கள் குருதேவர் இப்படியெல்லாம் கேட்டால் நீங்கள் கொடுக்க மாட்டீர்கள். ஆனால் ஏகலைவன் உடனேயே தன் விரலை வெட்டி அதை துரோணாச்சாரியாரிடம் கொடுத்தான்.

அதன் பின்னும் ஏகலைவனால் தன் நான்கு விரல்களை மட்டுமே உபயோகப்படுத்தி அம்பை ஏவ முடிந்தது. இருந்தும் முடிவில் அவன் என்ன ஆனான்? மகாபாரதப் போரில் அவன் ஸ்ரீகிருஷ்ணருக்கு எதிராகப் போர் புரிந்து அவரைக் கொல்ல முயன்றான். எனவே ஸ்ரீகிருஷ்ணர் தன் சுதர்சன சக்கரத்தால் இலகுவாக அவனது தலையை வெட்டி விட்டார்.

இங்கே ஏகலைவனின் சிரத்தையை நாம் ஒரு மண்பாண்டத்துக்கு ஒப்பிடலாம். ஒருவன் மண் பாண்டத்தை நெருப்பில் வைத்தால் அது கீறி விடும். ஏகலைவனின் சிரத்தை அந்த மண்பாண்டத்தைப் போன்றது. அவன் சுய நலமுடன் பக்தர்கள் அனைவரையும் அழிக்க விரும்பினான். அப்படிப் பட்டத் தவறான நோக்கத்துடன் அவன் துரோணாச்சாரியாரின் சிலையை வழிபட்டுப் புரிந்த சிரத்தை உண்மையில் ஒரு சிரத்தையே அல்ல. நம் சிரத்தை ஒருபோதும் ஏகலைவனின் சிரத்தையைப் போல் இருக்கக் கூடாது. நம் சிரத்தை அர்ஜீனனின் சிரத்தையைப் போல் இருக்க வேண்டும். நீங்கள் இதை எப்போதும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். ஏகலைவனிடம் தொடர்பு வைக்காதீர்கள். உண்மையில் பக்தர்கள் என்று கூறத் தகாத சில அறிவில்லாத பக்தர்கள் தங்கள் மகன்கள். சீடர்களுக்கெல்லாம் கூட ஏகலைவன் என்று பெயர் சூட்டியுள்ளார்கள். ஏகலைவன் ஒரு நல்ல சீடன் என்று ஒரு போதும் நாம் தப்பாக நினைக்கக் கூடாது. இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

சிலர் கேட்கலாம், "ஒரு குரு உத்தம அதிகாரியாக இல்லாமலிருந்தால் அவர் தன் சீடர்களுக்கு எப்படி உதவுவார்? அவர் பேசுவதிலோ, நடத்தையிலோ தவறு இருக்கலாமே" என்று. அந்த சந்தேகத்துப் பதில் என்னவென்றால், ஒரு குரு மத்தியம அதிகாரியின் கடைசி நிலையில் இருந்தால், அதாவது அவர் மத்தியம-உத்தம நிலையிலிருந்து, அவருக்கு உலக ஆசைகள் எதுவுமில்லாமலிருந்தால் அவர் வெகு சீக்கிரமே உத்தம அதிகாரியாகி விடுவார். இந்த உண்மையை மகாபிரபு ரதயாத்திரை உத்சவத்தின் போது குலீன கிராமத்தின் மக்களுக்குக் கூறியுள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில்(9.23) கீழ் வருமாறு கூறியிருக்கிறார்:

ஏ அபி அன்ய தேவதா பக்தா
யஜந்தே ஷ்ரத்தயான் விதாஹ
தே அபி மாம் ஏவ கௌந்தேய
யஜந்தி அவித்தி பூர்வகம்

"மற்ற தேவர்களை மிகவும் சிரத்தையுடன் வழிபடும் பக்தர்கள் உண்மையிலேயே என்னைத் தான் வழிபடுகிறார்கள், ஓ குந்தியின் மகனே! ஆனால் அவர்கள் ஒரு விதத்தில் தவறான விதத்திலேயே அதைச் செய்கிறார்கள். "

ஒருவன் தன் சொந்த உலக ஆசைகளைப் பூர்த்தி செய்ய தேவர்களை மிகவும் நம்பிக்கையுடன், "என் ஆசையை இவர் எப்படியும் பூர்த்தி செய்து விடுவார்" என்று எண்ணி வணங்கும்

போது அவன் உண்மையிலேயே ஸ்ரீகிருஷ்ணரையே வழிபடுகிறான்; ஆனால் அது தவறான முறை - என்று ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்குக் கூறுகிறார். சிலர் மூக்கை நேரடியாகத் தொடுகிறார்கள். மற்றும் சிலரோ தங்கள் கைகளை வளைத்து தலையைச் சுற்றியவாறு மூக்கைத் தொடுகின்றனர். அதேபோல் ஒருவருடைய ஆசைகளை ஸ்ரீகிருஷ்ணரே நேரடியாகத் திருப்தி செய்ய முடியும். அவர்கள் அந்த தேவர்களின் மூலமாகச் சுற்றி வளைத்துக் கேட்க வேண்டிய அவசியமேயில்லை. உண்மையில் ஸ்ரீகிருஷ்ணரே அவர்களுக்கு வேண்டியதை வழங்குகிறார். தேவர்களுக்கு அந்தச் சக்தி கிடையாது. அவர்களால் எந்த விதமான ஆசிகளையும் நேரடியாக வழங்க முடியாது.
இதே போல் தான் ஒரு குரு, மத்தியம-உத்தம அதாவது மத்தியம அதிகாரியின் கடைசி நிலையில் இருக்கலாம். அவர் இன்னமும் தன் சித்த சொரூபத்தைக் கூட அறியாதவராகவும் இருக்கலாம். ஸ்ரீநாரத முனிவர், ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி அனைவரும் தங்கள் சித்த சொரூபங்களை அறிந்தவர்கள். இந்த வகையில், இன்னமும் தன் சித்த சொரூபத்தை அறியாத அந்தக் குருவை மிகவும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஒரு சீடன் பின்பற்றினால் அவனது வழிபாட்டுக்கு யார் பலன் கொடுப்பார்? அந்த மத்தியம அதிகாரியினால் கொடுக்க முடியாது. அந்த குரு, நாரத ரிஷியைப் போலோ ஸ்ரீ சுக தேவ கோஸ்வாமியைப் போலோ ஒரு உத்தம அதிகாரியாக இருந்தால் அவரால் உடனடியாக கொடுக்க முடியும். ஆனால் ஒரு மத்தியம அதிகாரியினால் கொடுக்க முடியாது.

ஒரு மத்தியம அதிகாரியாக இருக்கும் குரு, ஹரிகதைகளைக் கூறித் தன் சீடர்களையெல்லாம் பக்தியில் மென்மேலும் வளர வைக்க முடியும். அதன் விளைவு என்ன? ஒருவனுக்கு அந்த குருவின் மேல் ஆழ்ந்த நம்பிக்கையிருந்தால் ஸ்ரீகிருஷ்ணரே தானாக நேரில் அவனுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கிறார். அது எல்லா விதமான பலன்களின் மேல் மிகவும் மகத்தான ஆன்மீகப் பலனாகவே இருக்கும்! மேலும், அந்த சீடனுக்கு ஸ்ரீகிருஷ்ணர், ஒரு உத்தம அதிகாரியின் நெருக்கத்தையும் அனுக்கிரகத்தையும் பெறும் பெரும் பலனை அளிப்பார். ஒரு மத்தியம அதிகாரியான குருவினால் தீட்சை அளிக்கப்பட்ட சீடன் உண்மையிலேயே மிக உயர்ந்த பக்தி நிலையை அடைய விரும்பும் போது, ஸ்ரீகிருஷ்ணரே அவ்வாறான உத்தம நிலையை வழங்குகின்ற ஒரு உத்தம குருவின் தொடர்பினையும் அவரது கருணையையும் கொடுத்து விடுகிறார். இதைப் புரிந்து கொள்ள முயலுங்கள். இது அவ்வளவு எளிதாக அறிந்து கொள்ள முடியாதது என்றாலும் தயவு செய்து புரிந்து கொள்ள முயலுங்கள். இதில் எந்த விதமான சந்தேகமும் கொள்ளாதீர்கள்.

உத்தம அதிகாரிகளான குருக்கள் எளிதாகக் கிடைக்க மாட்டார்கள். இந்த உலகத்தில் அவர்கள் மிகமிக அரிது. அது

மட்டுமின்றி, அவர்கள் அப்படியே இந்த உலகத்தில் தோன்றினாலும் கூட, பெரும்பான்மையான ஜனங்களுக்கு அவர்களை அடையாளம் கண்டுபிடிக்கத் தெரியாது. உதாரணமாக ஸ்ரீசுகதேவ கோஸ்வாமி ஆடையின்றி நிர்வாணமாகத் திரிந்தார். ஸ்ரீவம்ஸிதாச பாபாஜியோ அவரது பஜனை மடத்தின் வெளியில் மீன் முட்களையும் அசுத்தமான பொருட்களையும் போட்டிருந்தார். மேலும் உங்களுக்கு, ஸ்ரீல கௌர-கிஷோர தாஸ பாபாஜி மகாராஜா ஒரு உத்தமமான மகா பாகவதர் என்பது தெரியாமலிருக்கலாம். இவற்றை, ஒரு உத்தம அதிகாரியை குருவாகப் பெற்ற மத்தியம-உத்தம குருவோ, அல்லது மத்தியம அதிகாரியின் நிலையில் செயல் படும் ஒரு உத்தம அதிகாரியோ உங்களுக்குக் கூறினால் உங்களால் புரிந்து கொள்ள இயலும்.

நாம் இந்த விஷயத்தில் மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அந்த மாதிரியான குருக்களின் மேல் எந்த விதமான சந்தேகமும் ஒரு போதும் கொள்ளாதீர்கள். ஒரு மத்தியம-உத்தம நிலையில் இருக்கும் குரு அவரது உபதேசத்தின் மூலம் பேரளவு உதவி செய்ய முடியும். உயர்ந்த மத்தியம- அதிகாரி நிலையிலிருக்கும் ஒருவர், பரத மகாராஜாவைப் போலும், அம்பரீஷ மகாராஜாவைப் போலும் வெகு சீக்கிரமே உயர்ந்த பாவ பக்தியான ரதி என்ற நிலைக்கு வர முடியும். இதில் யாருக்காவது நம்பிக்கையில்லையென்றால் அவருடன் நீங்கள் தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் கழித்த மலத்தை எவ்வாறு விட்டு விடுவீர்களோ அதே போல் அவர்களை நீங்கள் விட்டு விட வேண்டும்.

# 6. இரண்டாம் தீட்சையின் அவசியம்

**ஸ்ரீல நாராயண மகாராஜா:** நான் என் வகுப்புகளில் பக்தியின் உண்மையான அர்த்தத்தையும், மேலும் பக்தியின் மிகச் சிறிய அம்சமான சிரத்தையிலிருந்து ஆரம்பித்து பின்னர் எவ்வாறு படிப்படியாக முன்னேறி பக்தியைப் பெறலாம் என்பதையும் விளக்கியிருக்கிறேன். அப்போது குரு பாதாஷ்ரயாவின் முக்கியத்துவத்தையும் பார்த்தோம். அப்போது இன்னும் ஒரு முக்கியமான விஷயம் வெளிப்பட்டது. அதை நான் இப்போது விவரித்து விளக்க விரும்புகிறேன். இந்த மிக முக்கியமான விஷயத்தை நீங்கள் உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்திக் கேளுங்கள். முதலில் ஸ்ரீபாத பத்மநாப மகாராஜா சர்ச்சையை ஆரம்பிப்பார். நான் அதற்குப் பதிலளிக்கிறேன்.

**ஸ்ரீ பாத பத்பநாம மகாராஜா:** தற்போது காயத்ரி மந்திர தீட்சையையும் ஹரிநாம தீட்சையையும் பற்றி ஒரு கேள்வி உள்ளது. சிலர் ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவும் ஸ்ரீலபக்தி ரக்ஷக ஸ்ரீதர மகாராஜாவும் கூறியவைகளிலிருந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் தாங்கள் புரிந்து கொண்டதின் பேரில், ஹரி நாம தீட்சையே முழுமையானது தான் என்றும் உலக மாயையில் சிக்கிய ஜீவன்களுக்கு அதைத் தவிர காயத்ரி மந்திர தீட்சை தேவையில்லை என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். நான் அவர்களது மேற்கோளை வாசிக்கிறேன். ஸ்ரீலமகாராஜா அதற்கு விளக்கம் அளியுங்கள். முதலில் அவர்கள் 1973- ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்தில் வைத்து ஸ்ரீலபிரபுபாதர் ஒரு அறையில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறியதை மேற்கோள் காட்டுகின்றனர்.

"ஹரே கிருஷ்ண மகாமந்திரத்தை ஒருவன் தொடர்ந்து ஜெபிக்கும் போது அவன் பரிசுத்தமடைகிறான். அதன் பின்னர் இரண்டாவது தீட்சைதான் காயத்ரி மந்திரம். ஸ்ரீஜீவ கோஸ்வாமியின் கருத்துப்படி முதல் தீட்சையே போதுமானது. அதாவது ஹரே கிருஷ்ண மகாமந்திரம் மட்டுமே போதும். ஆனால் இன்னமும் பரிசுத்தப் படுத்துவதற்காக இரண்டாவது தீட்சையான காயத்ரி மந்திரம் கொடுக்கப் படுகிறது."

பின்னர் அவர்கள் ஸ்ரீலபக்தி ரக்ஷக ஸ்ரீதர மகாராஜாவின் புத்தகமான "ஸ்ரீகுருவும் அவரது கருணையும்" என்ற நூலில் வருவதை சுட்டிக் காட்டுகிறார்கள். அவர் அதில், "நாம் நாம பஜனை அல்லது பகவானின் புனித நாமங்களை வழிபடுவதற்கு உதவுவதற்காகத் தான் மந்திரத்தைப் பெறுகிறோம். இல்லாவிடில்

அது ஒருபோதும் தேவையேயில்லை. இவ்வாறே அது தீர்மானிக்கப் படுகிறது. புனித நாமம் மட்டுமே ஒருவனுக்கு எல்லாவற்றையும் கொடுக்கவல்லது. அது பூரணமானது, முழுவதுமானது. காயத்ரி மந்திரம் நம்மை நாம அபச்சாரத்திலிருந்தும் நாம ஜெப தவறுகளிலிருந்தும் மட்டமான சிந்தனைகளிலிருந்தும் நம்மைக் காக்க உதவுகிறது. காயத்ரி மந்திரம் நமக்கு இது வரையிலும் மட்டும் தான் உதவிக்கு வருகிறது."

இந்த இரண்டு மேற்கோள்களின் மூலம், சிலர் மாயையில் கட்டுண்ட ஜீவன்களுக்கு ஹரிநாம தீட்சை மட்டுமே போதுமென்றும் காயத்ரி மந்திர தீட்சை தேவையில்லை என்றும் கூறுகின்றனர். அது மட்டுமல்லாமல் ஸ்ரீலநாராயண மகாராஜா, ஸ்ரீலபிரபுபாதரும் ஸ்ரீலஸ்ரீதர மகாராஜாவும் கூறியதை விடவும் வித்தியாசமாகக் கூறுகிறார் என்றும் கூறுகின்றனர். நான் ஸ்ரீலநாராயண மகாராஜா கூறிய இரண்டு மேற்கோள்களையும் வாசிக்கிறேன். முதலாவது மேற்கோள் அவரது "Going Beyond Vaikuntha (வைகுண்டத்திற்கு அப்பால்)" என்ற நூலிலிருந்து வருகிறது: "கோபால மந்திரமும் காமகாயத்ரி மந்திரமுமின்றி, வெறும் நாம சங்கீர்த்தனத்தின் மூலம் நமது பக்தி சாதகங்கள் முழுமையடையுமா? இல்லை! ஏனென்றால் நாம சங்கீர்த்தனம் மட்டும் செய்தால் நம்மால் ஸ்ரீகிருஷ்ணரின் சுத்த நாமத்தை ஜெபிக்க இயலாமல் போகும்." இரண்டாவது மேற்கோள் அவரது "Sri Bhajana Rahashya (ஸ்ரீ பஜன ரகசியங்கள்)" என்ற நூலிலிருந்து வருகிறது: "..எல்லாமே அங்கு உள்ளன. ஆனால் நாம் ஸ்ரீகிருஷ்ண நாமத்தை மட்டும் ஜெபித்து அதை உணர முடியும் என்று எண்ணாதீர்கள். நாம் ஹரிநாமத்தையும் காயத்ரி மந்திரத்தையும் ஜெபிக்க வேண்டும். நாம் ஹரே-கிருஷ்ண மந்திரத்திலுள்ள அனைத்தையும் அறிய வேண்டுமானால் காயத்ரி மந்திரத்தையும் ஜெபிக்க வேண்டும்."

இப்போது நாம் ஸ்ரீலநாராயண மகாராஜாவிடமிருந்து காயத்ரி மந்திர தீட்சைக்கும் ஹரிநாம தீட்சைக்குமுள்ள சம்பந்தங்களைக் கேட்போம். அவர் தயவுடன் தகுந்த சாஸ்திர முடிவுகளுடன் அவற்றை நாம் ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ளுமாறு விளக்குவார்.

**ஸ்ரீல நாராயண மகாராஜா:** நீங்கள் அனைவரும் சர்ச்சை என்னவென்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இப்போது நீங்கள் என் பதிலை மிகவும் கவனமாகக் கேட்டு இந்த மேற்கோள்களை எவ்வாறு சரியாகச் சம்பந்தப் படுத்துவது என்று பாருங்கள். யாரோ தீட்சை தேவையில்லை என்ற தனது கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் மறைமுகமாக கீழ்வருவதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தீக்ஷா புரஷ்சர்யா விதி அபேக் ஷா நாகரே
ஜிஹ்வா ஸ்பர்ஷே ஆ சண்டாள சபாரே உத்தாரே
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம், மத்திய. 15.108)

"தீட்சையின் முன்னால் ஒருவன் அதற்கு வேண்டிய எந்த விதமான செயல்களையும் செய்யத் தேவையில்லை. அவன் வெறுமனே புனித நாமத்தை உச்சரித்தால் போதும். இப்படி செய்தே, ஒரு தாழ்ந்த சண்டாள குலத்திலுள்ள ஒருவன் கூட முக்தியடைந்து விடுவான்."

புனித நாமம் அதற்குத் தாராளமாகப் போதும். புனித நாமம் மிகவும் சக்தி வாய்ந்தது. அது எந்தவிதமான ஆசைகளையும் திருப்திப் படுத்தும். அந்த நாமம் பிரஜ பிரேமையைக் கூட அளிக்கும். அப்படியானால் ஏன் நாம் தீட்சை எடுக்க வேண்டும்? அந்த இதழில் என்னுடைய வார்த்தையையும் பிரபூஜ்ய சரண பக்திரக்ஷக ஸ்ரீதர மகாராஜா மற்றும் ஸ்ரீலபக்தி வேதாந்த சுவாமி மகாராஜாவின் வார்த்தைகளையும் கூடவே போட்டிருப்பதால் நான் அவற்றைச் சமரசம் செய்து வைக்க விரும்புகிறேன்.

'தீட்சை - புரஷ்சர்யா' என்ற தீட்சையின் முன்னால் செய்யப்படும் விதி முறைகள் உண்மையிலேயே தேவையில்லாதது தான். ஆனால் இந்த சுலோகத்தின் முக்கியமான உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீலபக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூரா பிரபுபாதர் "அர்ச்சன தீப்பிகா" என்ற விக்கிரக வழிபாடுகளின் விதிமுறைகளைக் கூறும் நூலை எழுதியிருக்கிறார். அதில் அவர், ஹரி நாமம் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீராதாராணி இருவரின் பாகவத சொரூபம் என்று விளக்கியுள்ளார். மேலும், இதே காரணத்துக்காகத் தான் ஸ்ரீ சிக்ஷாஷ்டகத்தில், "பரம் விஜயதே ஸ்ரீகிருஷ்ண சங்கீர்த்தனம்" என்று வருகிறது.

ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை ஜெபித்தும், எப்போதும் நினைவு கூர்ந்தும் இருந்தால் எல்லா நிறைவுகளும் கிடைக்கும். அதனால் பிரஜ பிரேமை, மற்றும் ஸ்ரீராதா தாஸ்யம் (ஸ்ரீராதா ராணிக்குப் பணிப் பெண்ணாகச் சேவை செய்யும் மகா பாக்கியம்) கூடக் கிடைக்கலாம். ஆனால் ஒரு சாதகன் தன் முதல் நிலையில் இருந்து புனித நாமங்களை உச்சரிக்கும் போது அது முழுக்கவும் அபராதத்தையும், மற்றும் அனர்த்தங்களான லயம் (தூக்கம்), விக்ஷேபா (கவனமில்லாமல் மனம் ஓடுதல்), அப்ரதி-பத்தி (ஆன்மீக விஷயங்களில் மனமின்மை) போன்றவைகளையுமே கொண்டிருக்கும். அப்படிப்பட்ட ஒருவன் ஒருபோதும் சுத்த நாமத்தை உச்சரிக்க முடியாது என்பது உத்தரவாதம். மாறாக, அவனது உச்சரிப்பு நாம அபராதங்களைக் கொண்டிருக்கும். தீட்சை சம்ஸ்காரம் எடுத்த பின்னர் மட்டுமே அவனால் சுத்த நாமத்தை உச்சரிக்க முடியும்.

ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி தன் பக்தி சந்தர்பா (283) என்ற நூலில் தீட்சையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்:

திவ்யம் ஞானம் யதோ தத்யாத்
குர்யாத் பாபஸ்ய சங்க் ஷயம்
தஸ்மாத் தீக் ஷேதி சா ப்ரோக்தா
தேசிகைய்ஸ் தத்வ கோவிதைஹ்

"தீட்சையினால் ஒருவன் தன் பாவச் செயல்களால் வரும் கர்ம பலன்களை அழித்துவிட்டு தன் ஆத்ம ஞானத்தில் விழிக்கிறான். புனித சாஸ்திரங்களைப் படித்து அவற்றை நன்கு அறிந்த ஒரு மேதை இந்த தீட்சை முறையைப் பற்றி அறிவான். (மூலம் சைதன்ய சரிதாம்ருதம் மத்யலீலை 15.108 விளக்கவுரையிலிருந்து)".

காயத்ரி மந்திரம் ஒருவனுக்கு, திவ்ய ஞானம், ஆத்ம அறிவு, மற்றும் கிருஷ்ண தத்துவம், ஜீவ தத்துவம், ஸ்ரீகிருஷ்ண சம்பந்தம் அனைத்தையும் அளிக்கிறது. ஆனால் அனர்த்தங்கள் நிறைந்திருக்கும் ஒருவன் ஜெபிக்கும் நாமத்தால் இந்த சம்பந்தங்களைப் பெற இயலாது. மேலிருந்து கீழ் வரையிலும் நம் அனைத்து ஆச்சாரியார்களுமே, நாம் நம் பாவச் செயல்களின் பலன்களிலிருந்து விடுபட்டு அனர்த்தங்கள் அனைத்தும் நிவர்த்தி பெற்று அபராதங்கள் அனைத்தும் நிற்கப்பெற்று சுத்தமான நாமத்தை உச்சரிக்க வேண்டுமானால் நாம் கண்டிப்பாக தீட்சை (தீக்ஷா விதானா) பெற்றேயாக வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர். தீ - ட்சை. தீ என்றால் திவ்ய ஞானம் - அல்லது நமக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்குமுள்ள சம்பந்த ஞானம். ட்சா என்றால் பாவங்கள், அபராதங்கள் மற்றும் அனைத்து விதமான அழுக்குகளையும் கழுவுதல் என்று அர்த்தம். எனவே 'தீக்ஷா விதானா' மிகவும் அவசியம். தீட்சை சம்ஸ்காரம் இல்லாவிட்டால் ஒருவனுக்கு தனக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்கும் உள்ள சம்பந்தம் வெளிப் பட முடியாது. அவனால் சுத்த நாமத்தை உச்சரிக்க இயலாது. எனவே தீட்சை எடுக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

ஸ்ரீல சனாதன கோஸ்வாமி தன் ஸ்ரீஹரி பக்தி விலாசம் என்ற நூலில் கீழ் வருவதை எழுதியுள்ளார்:

யதா காஞ்சனதாம் யாத்
காம்ஸ்யம் ரஸ விதானதஹ
ததா தீக் ஷா விதானேன
த்விஜத்வம் ஜாயதே ந்ருணாம்.

"வெண்கலம் பாதரசத்தின் சேர்க்கையால் எவ்வாறு தங்கமாக ஆகிறதோ, அதேபோல் தீட்சையினால் ஒருவன் பிராமணன் ஆகிறான்."

வெண்கலம் பாதரசத்துடன் முறையாக சேரும் போது அது தங்கமாகி விடுகிறது. அதே போல் தீட்சை என்ற முறையினால் நம் புனித நாம ஜெபம் பரிசுத்தமாக அமையும். தீட்சை இல்லாவிடில் அது சாத்தியமாகாது.

தீட்சை மந்திரம் தேவையில்லையென்றால் பின் ஏன் ஸ்ரீலபக்தி சித்தாந்த சரஸ்வதி தாக்கூர பிரபுபாதா இரண்டாவது தீட்சையை ஸ்ரீலகௌர கிஷோர தாஸ பாபாஜி மகாராஜாவிடமிருந்து எடுத்தார்? ஏன் அவர் தனது சீடர்களுக்கும் அவ்வாறு தீட்சை அளித்தார்? அவரிடமிருந்து பரம பூஜ்யபாத ஸ்ரீலஸ்ரீதர கோஸ்வாமி மகாராஜாவும் கூட தீட்சை எடுத்துக் கொண்டார். தீட்சை தேவயில்லையென்றால் ஏன் ஸ்ரீலபிரபுபாதர் பக்தி சிந்தாந்த சரஸ்வதி தாக்கூரா தன் சிஸ்யர்களுக்கு தீட்சை வழங்கினார்? அதை ஏன் அவரது சீடர்களும் ஏற்றுக் கொண்டனர்?

அது மட்டுமல்ல, பிரம்ம தேவர் கூட ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து காமகாயத்ரியையும் கோபால மந்திரத்தையும் பெற்றுக் கொண்டார். பின்னர் பிரம்மா தீட்சை மந்திரத்தை ஸ்ரீநாரத ரிஷிக்குக் கொடுத்தார். நாரத முனிவர் அதைத் தன் எத்தனையோ சீடர்களுக்கும் வழங்கினார். நாரத முனிவர், துருவ மகாராஜாவுக்கு வெறும் ஹரி நாமத்தை மட்டும் வழங்கவில்லை. "ஓம் நமோ பகவதே வாசுதேவாய" என்ற தீட்சை மந்திரத்தையும் அளித்தார். ஸ்ரீசைதன்ய மஹாபிரபு முதல் தீட்சையில் ஸ்ரீஈஸ்வர பூரிபாதரிடமிருந்து ஹரி நாமத்தைப் பெற்றார். பின்னர் நாம ஜெபத்தைச் சுத்தமாக்கக் கோபால மந்திரத்தைப் பெற்றார். கோபால மந்திரம் ஆன்மீகமானது. எப்போதும் நிரந்தரமானது. அது நமக்கு ஸ்ரீகிருஷ்ணரிடம் கோபி ஜன வல்லபா என்ற சம்பந்தத்தைதக் கொடுக்கிறது. நாம் இந்த எல்லா உண்மைகளையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம் பரம்பரையிலுள்ள எல்லா ஆச்சாரியார்களுமே தீட்சை மந்திரத்தைப் பெற்றுள்ளனர். மாயையில் கட்டுண்ட ஜீவன்களுக்கு ஹரி நாமம் மட்டுமே போதும், என்று வாதிக்கும் எவராவது, நம் குரு பரம்பரையில் தீட்சை பெறாத எந்த ஒரு குருவையாவது குறிப்பிட முடியுமா? ஸ்ரீல கௌர கிஷோர தாஸ பாபாஜி மகாராஜா, ஸ்ரீபக்தி வினோத தாக்கூரா, ஸ்ரீலவிஸ்வ நாத சக்கரவர்த்தி தாக்கூரா, ஆறு கோஸ்வாமிகள் அனைவருமே இரண்டாவது தீட்சை எடுத்திருந்தார்கள். ஸ்ரீலபக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவும் கூட தீட்சை எடுத்திருந்தார். தீட்சை எடுப்பது தேவையில்லை என்று அவர்கள் நினைத்தால், பின் ஏன் தீட்சை எடுத்தார்கள்?

நீங்கள் இதன் ஆழ்ந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீசைதன்ய மகாபிரபு, ஸ்ரீநித்யானந்த பிரபு, ஸ்ரீஅத்வைத

ஆச்சாரியார், ஸ்ரீகதாதர பண்டிதர், ஸ்ரீஈஸ்வர பூரி பாதர், ஸ்ரீமாத வேந்திர பூரிபாதர் அனைவரும் தீட்சை எடுத்தவர்கள். பின் நாம் ஏன் எடுக்கக் கூடாது? ஏன் அது முக்கியமானதல்ல? அது முக்கியமானதல்ல வென்றால் ஏன் ஸ்ரீசனாதன கோஸ்வாமி தன் ஸ்ரீஹரி பக்தி விலாசா என்ற நூலில் அதைப் பற்றி எழுத வேண்டும்? இதைப் பற்றி ஸ்ரீ கோபால பட்ட கோஸ்வாமியும் ஏன் எழுத வேண்டும்? அவர் அதை பிரயோஜனமற்றது என்றா கூறியிருக்கிறார்? தீட்சை தேவையில்லை என்று கூறுபவர்களால் இந்த வினாக்களுக்கு நூறோ, இலட்சக் கணக்கான வருடங்கள் ஆனாலும் பதிலளிக்க இயலாது.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு தீட்சை எடுத்தார். அவர் கடவுள்களுக்கும் கடவுள் - ஸ்ரீராதாவும் ஸ்ரீகிருஷ்ணரும் சேர்ந்த சொரூபம் - இருந்தாலும் அவர் கயாவுக்குச் சென்று தீட்சை பெற்றுக் கொண்டார். இதை அவர் காசியில் கூடியிருந்த பெரும் சன்னியாசக் குழுவினிடம் கூட கூறியிருக்கிறார். அவர்கள் மகாபிரவுவிடம், "ஓ, நீர் ஒரு இளமையான, ஆனால் தகுதி நிறைந்த சன்னியாசி. நீர் வேதாந்தங்களைக் கேட்காமல் ஏன் எப்போதும் ஆடியும் பாடியும் தரையில் விழுந்து உருளவும் செய்கிறீர்? ஒரு சன்னியாசி இப்படி ஆடவும் பாடவும் கூடாது" என்று கூறினர்.

அதற்கு ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன்னுடைய குரு பரம்பரையைப் பற்றிக் கூறி பதிலளித்தார். தனது குருவான ஸ்ரீஈஸ்வர பூரி பாதரைப் பற்றிக் கூறி, அவர் தன்னிடம், "நீ ஒரு முட்டாள், அறிவில்லாதவன் ஆதலால் வேதாந்தங்களைப் படிக்க உனக்கு தகுதியில்லை. அதற்குப் பதிலாக ஹரே கிருஷ்ண மகாமந்திரத்தை ஜெபித்துக் கொண்டே இந்த சுலோகத்தை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருந்தால் போதும்" என்று கூறிவிட்டார்.

ஹரேர் நாம ஹரேர் நாம
ஹரேர் நாமைவ கேவலம்
கலோ நாஸ்தி ஏவ நாஸ்தி ஏவ
நாஸ்தி ஏவ கதிர் அன்யதா
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - ஆதி 17.21)

"இந்தக் கலியுலகத்தில், ஒருவன் ஆத்ம விடுதலை அடைய ஸ்ரீஹரியின் புனித நாமங்களை ஜெபிப்பதை விட வேறு எந்த வழியுமில்லை, வேறு எந்த வழியுமில்லை, வேறு எந்த வழியுமில்லை. "

ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன் குருவிடமிருந்து சன்னியாசம் மட்டும் எடுக்கவில்லை. அவர் இரண்டாவது தீட்சையான கோபால மந்திரத்தையும் பெற்றார். நமது பரம்பரையில், ஒருவனது நாம ஜெபங்கள் பரிசுத்தமாக இருப்பதற்காகவும், தனக்கும்

ஸ்ரீகிருஷ்ணருக்குமுள்ள தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும், ஸ்ரீகிருஷ்ணரே கருணையுடன் தன் புனித நாமமாகத் தோன்றிய கோபால மந்திரத்தை ஹரி நாமத்துடன் தீட்சையாக வழங்குகிறோம். மகாபிரபுவின் காலத்துக்கு முன்னர் கோபால மந்திரம் மட்டுமே வழங்கப்பட்டது. பின்னர் ஸ்ரீசைதன்ய மஹாபிரபு வுக்குப் பின்னர் தோன்றிய ஸ்ரீலதியான சுந்திர கோஸ்வாமியும் ஸ்ரீலகோபால குரு கோஸ்வாமியும் இப்போது நாம் கடைப் பிடிக்கும் விதி முறைகளை வழங்கினார்கள். அவர்கள் பிரம்ம காயத்ரி, குரு மந்திரம், குரு காயத்ரி, கௌர மந்திரம், கௌர காயத்ரி, ஸ்ரீகிருஷ்ண மந்திரம் (கோபால மந்திரம்), கடைசியில் காம காயத்ரி இவையனைத்தையும் கொடுத்தார்கள். இவ்வாறு ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் சகாவான, வக்ரேஷ்வர பண்டிதரின் சீடரான ஸ்ரீலகோபால குரு கோஸ்வாமி ஆரம்பித்த முறையையே நாம் இப்போதும் பின்பற்றுகிறோம்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு தன் குருதேவர் அவருக்குக் கூறியதை நமக்குச் சொல்கிறார்:

"கிருஷ்ண-மந்த்ர ஜெப சதா-எயி மந்த்ர ஸாரா".

நீ எப்போதும் இடைவிடாமல் ஸ்ரீகிருஷ்ணரின் புனித நாமங்களை ஜெபிக்க வேண்டும். இதுவே எல்லா மந்திரங்களிலும் மற்றும் அனைத்து வேத பாசுரங்களிலும் உள்ள சாரமாகும்.

கிருஷ்ண மந்த்ர ஹயிதே ஹபே சம்ஸார மோச்சனா
கிருஷ்ண நாம ஹயிதே பாபே கிருஷ்ணேர சரணா
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ரும் - ஆதி 7,73)

"ஒருவன் ஸ்ரீகிருஷ்ணரின் புனித நாமத்தை ஜெபித்தால் அவன் பிறப்பு இறப்புகளிலிருந்து விடுபடுகிறான். ஹரே கிருஷ்ண மகாமந்திரத்தை ஜெபித்தால் ஒருவன் உண்மையிலேயே ஸ்ரீகிருஷ்ணரின் கமலப் பாதங்களைக் கண்டு விடலாம்."

புனித நாமங்களை அபராதங்கள் விளைவிக்காமல் ஜெபிப்பது தீட்சை முறையைப் பொறுத்ததல்ல. ஆனால் அந்த நாமம் சுத்த நாமமாக இருக்க வேண்டும். அது எவ்வாறு சுத்த நாமமாகக் கிடைக்கும்? தீட்சை முறையின் வழியாக மட்டுமே அது சாத்தியமாகும். வேறெந்த வகையாலும் முடியாது. புனித நாமம் பரிசுத்தமானதல்ல என்று அதற்கு அர்த்தமல்ல. ஒருவன் சுத்த பக்தனாக இல்லாமலிருந்தால் அவனால் புனித நாமங்களைச் சுத்தமாக ஜெபிக்க முடியாது என்று அர்த்தம். அவனால் அந்த நாமத்தைப் போல் ஒலிக்கும் சப்தங்களை மட்டும் தான் உண்டு பண்ண முடியும். அவனால் ஒன்றிலோ நாம அபராதங்களுடன் (நாம-அபராதா) வெறும் வார்த்தைகளை மட்டும் ஜெபிக்க முடியும்,

அல்லது வெளித் தோற்றத்தில் ஜெபிப்பது போல் (நாம-ஆபாஷா) தோற்றம் அளிக்க முடியும்.

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு சுத்த நாமத்தை ஜெபித்தார். எனவே அவரால் தன் குரு தேவரிடம் அதைப் பற்றிக் கூற முடிந்தது.

கிபா மந்த்ர திலா, கோசானி, கிபா தார பல
ஜெபித்தே ஜெபித்தே மந்த்ர கரில பாகலா
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - ஆதி 7.81)

"என் அன்பு ஆண்டவா, நீவிர் எந்த விதமான மந்திரத்தை எனக்குக் கொடுத்தீர்? அந்த மகாமந்திரத்தை ஜெபித்து நான் பைத்தியமாகவே ஆகி விட்டேன்! "

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு சன்னியாசிகளிடம் கூறினார், "நான் ஏன் இப்படி ஆடியும் பாடியும் தரையில் புரள்கிறேன் என்று கேட்கிறீர்கள். காரணம் என்னவென்று கேளுங்கள். என் குருதேவர் எனக்கு தீட்சை வழங்கும் போது அவர் எனக்கு ஹரி நாமத்தையும் கோபால மந்திரத்தையும் கொடுத்து, 'ஜெபித்தே ஜெபித்தே மந்த்ரா' என்று கூறினார்." இங்கே சைதன்ய மகாபிரபு ஹரி நாமமான மகா மந்திரத்தை மட்டும் பெற்றிருந்தால் 'மந்த்ரா' என்ற வார்த்தையை உபயோகப் படுத்தியிருக்க மாட்டார்.

மந்த்ரா என்பது இங்கே கோபால மந்திரம் அல்லது காம காயத்ரி மந்திரத்தைக் குறிக்கிறது. அவர் முதலில் ஹரி நாமத்தையும் அதன் பின் கோபால மந்திரத்தையும் பெற்றார். "ஜெபித்தே ஜெபித்தே மந்த்ர கரில பாகலா..." - இது என்னைப் பித்துப் பிடித்தவனைப் போல் ஆக்கி விட்டது. "கிருஷ்ண நாம, கிருஷ்ண மந்த்ர" - மகா மந்திரமும் கோபால மந்திரமும். இவை என்னை பைத்தியம் பிடித்தவனைப் போல் ஆக்கி விட்டது!

எவரொருவர் கோபால மந்திரத்தையும் காம காயத்ரி மந்திரத்தையும் எப்போதும் நினைவில் கொண்டு தியானிக்கிறார்களோ அவர்களுக்கு உடனடியாக ரதி என்ற பாவ பக்தி இதயத்தில் புகுந்து விடுகிறது!

ஸ்ரீசைதன்ய சரிதாமிர்தம் (அந்தியலீலை 4.192) வில் இவ்வாறு எழுதப் பட்டுள்ளது.

தீக் ஷா காலே பக்த கரே ஆத்ம சமர்ப்பண
செய் காலே கிருஷ்ண தாரே கரே ஆத்ம சம

"தீட்சையின் போது ஒரு பக்தன் தன்னை முழுவதுமாக ஸ்ரீகிருஷ்ணரின் சேவைக்காக அர்ப்பணிக்கும் போது, அந்த

பக்தனை ஸ்ரீகிருஷ்ணர் தன்னைப் போல் பாவித்து ஏற்றுக் கொள்கிறார். முதல் தொடக்க தீட்சை ஹரி நாமம் மட்டுமே, இரண்டாவது தீட்சை தான் உண்மையிலேயே தீட்சை என்று அழைக்கப் படுகிறது. ஆத்ம சமர்ப்பணம் என்ற இரண்டாவது தீட்சையில் ஒரு சீடன் முழுவதுமாக தன் குருதேவரின் காலடிகளில் சரணடைகிறான். அந்த சமயம் ஸ்ரீகிருஷ்ணர் அவனுக்கு தன் காலடிகளைத் தஞ்சமாகக் கொடுக்கிறார். அதன் பின் அவர் அந்த சீடரிடம் மிகவும் நெருங்கியவராகவும் நேசமானவராகவும் ஆகிறார்.

வைஷ்ணவ விதிமுறைகளின் படி ஒருவன் ஒரு பிராமணரிடமிருந்து மட்டுமே தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். ஸ்ரீஹரி பக்தி விலாசத்தில் (2.6) விஷ்ணு யாமலாவில் ஸ்ரீசங்கரர் தன் மனைவியான பார்வதி தேவியிடம் கீழ் வருமாறு கூறுகிறார்.

அதிக் ஷிதஸ்ய வாமோரு க்ருதம் சர்வம் நிரர்த்தகம்
பசு யோனிம் அவாப் நோதி
தீக் ஷா விரஹிதோ ஜனஹ

"ஓ அழகுள்ள பார்வதி தேவியே! ஒருவன் தீட்சை எடுக்காமல் செய்யும் சாதனங்கள், பஜனைகள், பூஜைகள் அனைத்தும் வீணே. அவற்றால் எந்த பிரயோஜனமும் இல்லை. அப்படி சரியாகத் தீட்சை பெறாதவர்கள் அனைவரும் பற்பல மிருகப் பிறவிகளையே எடுக்கின்றனர்."

ஸ்ரீல ரூப கோஸ்வாமி எழுதிய பத்யாவளி என்ற நூலில் ஹரி நாமத்தை வெறுமனே நாக்கைத் தொட்டு உச்சரித்தாலே போதும் அது எல்லாவற்றையும் கொடுக்கும் சக்தியுள்ளது என்று எழுதியுள்ளார்.

ஆக்ருஷ்திஹி க்ருத சேதஸாம்
சுமனஸாம் உச்சாத்தனம் சாம்ஹஸாம்
ஆசண்டாலம் அமூக லோக சுலபோ
வஸ்யஸ் ச முக்தி ஸ் ரீயஹ
நோ தீக் ஷாம் ந ச சத்க்ரியாம் ந ச
புரஸ்சர்யாம் மனாக் ஈக் ஷதே
மந்த்ரோ அயம் ரஸனா ஸ்ப்ருக்
ஏவ பலதி ஸ்ரீ கிருஷ்ண நாமாத் மகஹ

"ஸ்ரீகிருஷ்ணரின் கவரும் குணம் எத்தனையோ சாதுக்களையும் மகான்களையும் இழுத்துள்ளது. அது எல்லா பாவ விளைவுகளையும் அழிக்கிறது. அது பேச முடியாத ஊமையைக் கூட பேச வைக்கிறது. அது மிகவும் சக்தி வாய்ந்தது. அது எல்லோருக்கும் எப்போதும் கிடைப்பது. சண்டாளன் முதலான அனைத்து விதமான கீழ் நிலையிலிருக்கும் ஒருவனுக்கும் கூட அது கிடைக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணரின் புனித நாமம் முக்தியின் ஐஸ்வர்யம். அது ஸ்ரீகிருஷ்ணருக்குச் சமம். ஒருவன் தன் நாவால் அவரது புனித நாமத்தை உச்சரித்தாலே போதும், உடனடியாகவே அதன் பலன் வந்து விடுகிறது. அவற்றை உச்சரிக்க எந்த விதமான தீட்சையோ புண்ணிய காரியங்களோ, அல்லது புரஷ்சர்யா என்ற தீட்சையின் முன்னால் கடைப் பிடிக்கப் படும் விதிமுறைகள் கூட தேவையில்லை. புனித நாமம் அவை எவற்றிற்காகவும் காத்துக் கொண்டிருப்பதில்லை. அது சுயமாகவே முழுமையானது." (ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம், மத்யலீலை 15.110 இலிருந்து எடுக்கப்பட்டவை).

ஆனால் ஒருவன் சுத்தமாக ஜெபிக்கவில்லை யென்றால் இவையெல்லாம் நடக்குமா? இந்தக் கேள்வியைத் தான் இங்கே எல்லோரும் எழுப்பியுள்ளனர். இது தீட்சையில்லாமல் நடக்குமா? ஹரி பக்தி விலாசத்தில் (17.4 - 5,7) கீழ்க் காணும் சுலோகங்கள் வருகின்றன.

வினா யேன ந சித்த ஹ ஸ்யான்,
மந்த்ரோ வர்ஷ ஸதைர் அபி
க்ருதேன யேன் லபதே,
சாதகோ வாஞ்சிதம் பலம்

புரஸ் சரண சம்பன்னோ,
மந்த்ரோ ஹி பல தாயகஹ
அதஹ புரஷ்கி ரியாம் குர்யாத்,
மந்த்ர வித் சித்தி கங்க் ஷயா
புரஷ்கிரியா ஹி மந்த்ராணாம்,
பிரதானம் வீர்யம் உச்யதே
வீர்ய ஹீனோ யதா தேஹி,
சர்வ கர்மசு ந க் ஷமஹ

புரஸ் சரண ஹீனோ ஹி,
ததா மந்த்ரஹ பிர கீர்த்திதஹ

"ஒருவன் புரஸ்சர்யா போன்ற சடங்குகளைக் கடைப் பிடிக்காமல் இந்த மந்திரத்தை நூற்றுக் கணக்கான வருடங்கள் ஜெபித்தாலும் அவனால் முழுமையை அடைய முடியாது. ஆனால் புரஸ்சர்யா விதிகளைச் சரியாகக் கடைப்பிடித்தவனால் மிகவும் எளிதாக வெற்றியை அடைய இயலும். எனவே ஒருவன் தன் தீட்சை பூரணமாக முழுமை அடைய வேண்டும் என்று விரும்பினால், அவன் முதலில் புரஸ்சர்யா சடங்குகளைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். ஒருவன் மந்திரத்தை வெற்றிகரமாக ஜெபிப்பதற்கு புரஸ்சர்யா விதிகள் உயிர்ச் சக்தி போன்றது. உயிர்ச் சக்தியில்லாமல் ஒருவனால் எதுவும் செய்ய இயலாது. அதே போல்

புரஸ்சர்யா விதி என்ற உயிர்ச் சக்தியில்லாமல் எந்த மந்திரமும் பூரணமடைய முடியாது." (ஶ்ரீ சைதன்ய சரிதாமிர்தம் மத்யலீலா 15.108 -க்கு ஶ்ரீலபிரபு பாதர் அளித்த விளக்கத்திலிருந்து)

இந்த விஷயத்தில் இன்னமும் ஏதாவது சந்தேகமிருந்தால் அதையும் கரைத்து விடுவதற்கு ஶ்ரீல ஜீவ கோஸ்வாமி ஒரு சுலோகத்தை எழுதியுள்ளார். அவரது பக்தி சந்த்ர்பா (283-284) என்ற நூலில் விக்கிரக வழிபாட்டையும் தீட்சை சடங்கையும் பற்றி கீழ்வருமாறு கூறியுள்ளார்:

*அவஸ்யகத் ஆவஸ்யகத்வம் நாஸ்தி,*
*தத் வினாபி ஸரணாபத்யாதீனாம்*
*ஏகதரேணாபி புருஷார்த்த சித்தேர்*
*அபிஹிதத்வாத் ததாபி ஶ்ரீ*

*நாரதாதி வர்த்மானு சரபிஹி*
*ஶ்ரீ-பாகவதா ஸஹ சம்பந்த*
*விஷேஷம் தீக் ஷா விதானேன*
*ஶ்ரீ குரு சரண சம்பாதிதம்*
*சிகிர்ஷத் பிஹி க்ருதாயாம்*
*தீக் ஷாயாம் அர்ச்சணம் அவஸ்யம் க்ரியேதைவ.*

*யத்யபி சொரூபகோ நாஸ்தி,*
*ததாபி பிராயஹ ஸ்வபாவதே தேஹாதி-*
*சம்பந்தேன கதர்ய சீலனம் விக்*
*ஷிப்த சித்தானாம் ஜனானாம் தத்- தத்-*

*சங்கோச்சி கரணாய*
*ஶ்ரீமத் ரிஷி பிரபிர்த்திபிர் அத்ரார்ச்சன*
*மார்கே க்வசித் க்வசித் க்வசித்*
*காசின் மர்யாதா ஸ்தாபிதாஸ்தி*

"ஶ்ரீமத் பாகவதத்தின் படி, எவ்வாறு பஞ்சராத்ராவில் குறிப்பிடப்பட்டுள்ள சில விதிமுறைகளைக் கடைப் பிடிக்கத் தேவையில்லையோ, அதே போல் தான் விக்கிரக வழிபாடும் உண்மையில் தேவையில்லை. ஶ்ரீமத் பாகவதத்தின் படி, ஒருவன் விக்கிரக வழிபாடு எதுவுமே செய்யாமல், தன்னை முழுவதுமாக பகவானின் திருவடிகளில் சரணடைவது போன்ற பக்தியின் மற்ற அங்கங்களைப் பின்பற்றி, தன் வாழ்வில் பூரண வெற்றியை அடைய முடியும். இருந்தாலும் ஶ்ரீநாரதரையும் அவரது வழி முறையில் வந்த மகான்களையும் பின்பற்றும் வைஷ்ணவர்கள் தாங்கள் பகவானிடம் சொந்தமான நெருங்கிய உறவு வைத்துக் கொள்ள ஆசைப் படுகின்றனர்.

"அதனால் அவர்கள் ஒரு முறையான பரம்பரையில் வரும் குருவினிடம் தீட்சை எடுக்கும் போது சம்பிரதாயப் படி விக்கிர வழிபாட்டையும் ஆரம்பிக்கின்றனர். விக்கிரக வழிபாடு உண்மையிலேயே தேவையில்லை யென்றாலும், உலக மாயையிலிருக்கும் பெரும்பாலானவர்களுக்கு அப்படிப்பட்ட வழிமுறைகள் தேவைப் படுகின்றன. நாம் அவர்களது உடல் மற்றும் சிந்தனைகளைக் கவனித்தோமானால் அவர்களது குணம், நடத்தைகள் எல்லாம் அசுத்தமாகவும், தங்கள் மனம் எப்போதும் கலங்கிக் கொண்டேயிருப்பதையும் பார்க்கலாம்.

"எனவே அதைச் சரிப்படுத்த வேண்டி, மகா முனிவரான நாரதர் போன்றவர்கள் வெவ்வேறு காலங்களில் தோன்றி வெவ்வேறு விதிமுறைகளினால் விக்கிரக வழிபாடுகள் செய்வதை வலியுறுத்தினார்கள்."
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் மத்யலீலை 15.108 இன் விளக்கத்திலிருந்து)

வெறுமனே நாக்கினால் தொட்டு ஸ்ரீகிருஷ்ண நாமத்தைக் கூறினால் போதும், அந்த புனித நாமம் ஸ்ரீகிருஷ்ண சேவை, ஸ்ரீராதா சேவை இப்படி எல்லா விதமான பூரணங்களையும் கொடுத்து விடும். ஆனால் அதே சமயம் ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி மிகவும் தெளிவாக இந்தச் சுலோகத்துக்குக் கொடுத்துள்ள விளக்கத்தை ஒருவன் தன் இதயத்தில் எப்போதும் தொடர்ந்து நினைக்க வேண்டும். அவரது பக்தி சந்தர்பா (283) என்ற நூலில் கீழ்க்கண்ட சுலோகத்தை எழுதியுள்ளார்:

*த்விஜானாம் அனுபேதானாம் சுவகர்மாத்ய யனாதிஷு*
*யதா தீக்காரோ நாஸ்திக ஸ்யாச் சொப்பனயனாத் அனு*
*ததாத்ராதீக் ஷிதானாம் து மந்த்ர தேவார்சனாதிஷு*
*நாதி காரோ அஸ்தி அதஹ குர்யாத்*
*ஆத்மானம் சிவ-சம்ஸ்துதம்*

ஒருவன் பிராமணக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கூட, முறையாக தீட்சை எடுத்து பூணூலை ஏற்காமல், அவன் வேதச் சடங்குகளைச் செய்ய முடியாது. அவன் பிராமணக் குடும்பத்தில் பிறந்தும் கூட, தீட்சை எடுத்து பூணூலைத் தரித்த பின்னர் மட்டுமே உண்மையில் அவன் பிராமணன் ஆகிறான். ஒருவன் இப்படி பிராமணனாக தீட்சை எடுக்காமல் பகவானின் புனித நாமத்தைச் சரியாக ஜெபிக்க முடியாது (ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் மத்யலீலா15.108 இலிருந்து)

வெறுமனே ஸ்ரீகிருஷ்ண நாமத்தை ஒருவன் தன் நாக்கில் தொட்டவாறே கூறினால் மட்டும் போதும்; அவனுக்கு எல்லாம் கிடைக்கும் என்பது வாஸ்தவம் தான். ஆனால் மாயையில் உழலும்

ஒருவனின் ஜட நாக்கால் ஆன்மீக வடிவமான புனித நாமத்தைத் தொட முடியாது!

அதஹ ஸ்ரீ கிருஷ்ண நாமாதி
ந பவேத் க்ராஹ்யம் இந்திரியயிஹி
சேவோன் முக்கே ஹி ஜிஹ்வாதவ்
ஸ்வயம் ஏவ ஸ் புரத்தி அதஹ
(பக்தி ரசாம்ருத சிந்து 1.2.234)

"ஒருவன், தன் ஜட இந்திரியங்களால், பகவானின் ஆத்ம வடிவான புனித நாமத்தையோ அவரது ரூபத்தையோ, அவரது செயல்களையோ, அவரது லீலைகளையோ அறிய முடியாது. ஆனால் அவன் உண்மையிலேயே பக்தி சேவைகள் மூலம், தன் நாவால் ஜெபித்தால் அவனுக்குப் பகவான் தன்னை வெளிப்படுத்துகிறார்."

ஸ்ரீநாரத முனிவரும், முந்தைய ஆச்சார்யார்களான பிரம்ம தேவர், சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் இவர்கள் அனைவருமே தீட்சை எடுத்துக் கொண்டனர். ஒருவன் தீட்சை எடுத்த பின்னர், சாதன பஜனைகள் செய்து தன் இஷ்ட தெய்வங்களான ஸ்ரீராதாவையும் ஸ்ரீகிருஷ்ணரையும் வழிபடுகிறான். ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி எழுதியதன் படி, ஒருவன் தீட்சை எடுக்கா விட்டால் அவனுக்கு ஸ்ரீகிருஷ்ணரிடம் எந்த சம்பந்தமும் இருக்காது. தாஸ்யம், சாக்யம், வாத்ஸல்யம், மாதுர்யம் எதுவுமே கிடையாது. தீட்சை இல்லாமல் இது எதுவுமே சாத்தியமாகாது. நம் சம்பிரதாயத்தின் படி, ஒருவன் கோபால மந்திரத்தில் வரும் "கோபிஜன-வல்லபாய" என்பதை உச்சரித்தால் மட்டுமே அவனுக்குச் சம்பந்த ஞானம் வரும். இல்லாவிட்டால் சம்பந்த ஞானம் வராது.

இதே சுலோகத்துக்கு ஸ்ரீலவிஸ்வநாத சக்கரவர்த்தி தாக்கூரா விளக்கவுரை எழுதியுள்ளார். அதில் அவர் இவ்வாறு தெளிவாகக் கூறுகிறார்: 'ஒருவன் எல்லாவிதமான சாதகங்களையும் விட்டுவிட்டு பகவானின் புனித நாமங்களை ஜெபித்தும் எப்போதும் தியானித்தும் இருக்கலாம். ஆனால் அவன் முறையாக ஒரு வைஷ்ணவ குருவிடம் தீட்சை எடுக்க வேண்டிய தேவையில்லை என்று எண்ணி தீட்சை எதுவும் பெறாமல், தன் இஷ்ட தெய்வமான ஸ்ரீகிருஷ்ணரை தீவிரமாக வழிபட்டாலும், அவனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் கிடைக்கவே மாட்டார். அவன் பெறும் ஒரே ஒரு புண்ணியம் அவன் நரகத்துக்குப் போக மாட்டான்.

எனவே அவன் முறையாக ஒரு குருவிடம் தீட்சை வாங்குவது வரையிலும் எந்த ஜென்மத்திலும் ஸ்ரீகிருஷ்ணரின் கமலப் பாதங்களை ஒருபோதும் அடைய மாட்டான். அவன் செய்த

பஜனைகளின் புண்ணியங்களால், தன் மறு பிறவியில் ஒரு தெய்வ நம்பிக்கை மிகுந்த குடும்பத்தில் பிறந்து, பின்னர் சாது சங்கம், குரு-பாதாஷ்ரயா அதன் பின் தீட்சையையும் பெறுவான். அப்போது அவன் பக்தியில் மிகவும் நன்றாக முன்னேறுவான். இது தான் ஒரே வழி.

ஸ்ரீல ரகு நாத தாஸ கோஸ்வாமியும் இதைப் பற்றித் தன் "மன சிக்ஷா" என்ற நூலில் எழுதியுள்ளார்.

*குரவ் கோஸ்தே கோஸ்தாலயிஸு சுஜனே பூசுர கனே*
*ஸ்வ மந்த்ரே ஸ்ரீ நாம்னி வ்ரஜ நவ யுவ த்வந்த்வ ஸாரணே*
*சதா தம்பம் ஹித்வா குரு ரதிம் அபூர்வாம் அதித்தரா*
*மயே ஸ்வாந்தர் பிராதஸ் சதுபிர் அபியாஸே த்ருத பதஹ*

"ஓ, என்னுடைய சகோதரனே, என்னுடைய முட்டாள் மனமே! நான் உன் கால்களைப் பிடித்துக் கொண்டு கேட்கிறேன். சில இனிய வார்த்தைகளை நான் உன்னிடம் தாழ்மையாக வணங்கிக் கூறுகிறேன். நீ தயவுசெய்து உன் தற்பெருமையை விட்டுவிட்டு ஸ்ரீகுரு தேவரிடமும் ஸ்ரீவிரஜ பூமியிடமும், விரஜபூமியில் வாழும் விரஜவாசிகளிடமும், வைஷ்ணவர்களிடமும், பிராமணர்களிடமும், என் தீட்சை மந்திரத்திடமும், பகவானின் புனித நாமங்களிடமும், நிரந்தரமாக எப்போதும் பேர் இளமையுடனிருக்கும் விரஜ தம்பதிகளான ஸ்ரீராதா ஸ்ரீகிருஷ்ணர் இருவர்களிடமும் இடைவிடாமல் தூய்மையான ரதியை சீக்கிரமே வளர்ப்பாயாக."

தீட்சை உண்மையில் தேவையில்லை என்றால் ஏன் அவர் "மந்த்ரா" என்று இங்கு கூறியிருக்கிறார்? அவர் ஏன் "ஸ்ரீ நாம்னி" என்று கூறவில்லை? "ஸ்வ மந்த்ரா" என்றால் என்ன? மந்திரத்திற்கும் ஹரி நாமத்திற்கும் சில வித்தியாசங்கள் உள்ளன. எனவே தான் அவர், தன் மனதிடம், "நீ தற்பெருமையை விட்டெறிந்து விட்டு, அவர்கள் இருவரிடமும் தூய்மையான இதுவரைக்கும் நடந்திராத அளவுக்கு உறவை வளரச் செய். புனித நாமத்தையும் மந்திரத்தையும் சரணமாகக் கொள். அப்படியென்றால் உன் வாழ்வு வெற்றியாகும்" என்று கூறுகிறார். எனவே இங்கே ஒன்றல்ல, இரண்டு பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவரது குருதேவர் அவருக்கு மந்த்ரா - அதாவது தீட்சையைக் கொடுத்துள்ளார்.

இப்போது தயவு செய்து இந்த அனைத்து விளக்கங்களையும் சேர்த்து, நீங்களே சரிபார்த்துக் கொள்ளுங்கள்!

கௌர பிரேமானந்தே!

நிறைந்தது.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

# வினாக்கள்

1. ' குரு' என்ற சொல்லின் பொருள் என்ன?
    1. ஆசிரியர்
    2. ஆச்சாரியர்
    3. கனமானவர்
    4. பக்தர்

2. ' கீதகோவிந்தம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
    1. ஸ்ரீல ரூபகோஸ்வாமி
    2. ஸ்ரீல சனாதன கோஸ்வாமி
    3. ஸ்ரீல நரோத்தமதாஸ தாகூர்
    4. ஸ்ரீல ஜெயதேவ கோஸ்வாமி

3. யாருக்கு வேதத்தின் ஞானங்கள் அளிக்கப்படும்?
    1. பகவானை தியானம் செய்பவர்களுக்கு
    2. சமூக சேவை செய்பவர்களுக்கு
    3. சாஸ்திர ஞானம் உடையவர்களுக்கு
    4. பகவானிடமும், குருவிடமும் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு

4. 'பக்தி லதா பீஜ' ஒருவனுக்கு எப்போது கிடைக்கும்?
    1. பகவானை நேரடியாக வழிபடும்போது
    2. புனித யாத்திரை செல்லும்போது
    3. நாமம் ஜெபிக்கும்போது
    4. குரு மற்றும் பகவான் கருணையால்

5. ஸ்ரீலரூபகோஸ்வாமியின் பரம்பரையில் வந்த அனைவரும்:
    1. பிராமணர்கள்
    2. தூய பக்தர்கள்
    3. ஆச்சாரியர்கள்
    4. மஞ்சரிகள்

6. ஏகலைவன் யாரை குருவாக ஏற்று வில்வித்தை கற்றான்?
   1. கிருபாச்சாரியார்
   2. துரோணாச்சாரியார்
   3. அத்வைத ஆச்சாரியார்
   4. மத்வாச்சாரியார்

7. உத்தம அதிகாரிகளான குருக்கள் ஏன் கிடைக்கமாட்டார்கள்?
   1. உலகில் அவர்கள் எண்ணிக்கை குறைவு.
   2. அவர்கள் காட்டில் வசிப்பார்கள்
   3. அவர்கள் மிக எளிமையாக இருப்பார்கள்
   4. ஜனங்களால் அவர்களை அடையாளம் காண இயலாது.

8. 'ஸ்ரீ குருவும் அவரது கருணையும்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
   1. ஸ்ரீல கோபாலபட்ட கோஸ்வாமி
   2. ஸ்ரீல பக்தி ரக்ஷக ஸ்ரீதர மகாராஜா
   3. ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூரா
   4. நரோத்தம தாஸ தாகூரா

9. காயத்ரி மந்திரம் ஒருவனுக்கு எதைக் கொடுக்கிறது?
   1. ஆத்ம ஞானம்
   2. திவ்ய ஞானம்
   3. கிருஷ்ண சம்பந்தம்
   4. அனைத்தும்

10. ஒருவன் எப்போது பிராமணன் ஆகிறான்?
   1. பிராமண குலத்தில் பிறக்கும்போது
   2. கோவில் பூஜைகள் செய்யும்போது
   3. பூநூல் அணிந்திருக்கும்போது
   4. தீட்சை பெறும்போது

11. ஸ்ரீசைதன்ய மகாபிரபு முதல் தீட்சையை யாரிடமிருந்து பெற்றார்?

1. ஈஸ்வர பூரி பாதா
2. மாதவேந்திர பூரி பாதா
3. சர்வ பௌம பட்டாச்சாரியார்
4. கேசவபாரதி பாதா

12. 'ஹரி பக்த விலாசம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

1. ஸ்ரீல ரூபகோஸ்வாமி
2. ஸ்ரீல சனாதன கோஸ்வாமி
3. ஸ்ரீல கோபால பட்ட கோஸ்வாமி
4. ஸ்ரீல ஜீவகோஸ்வாமி

13. புனித நாமங்களை எப்போது அபராதமின்றி ஜெபிக்க முடியும்?

1. காலையில்
2. மாலையில்
3. தீட்சை பெற்ற பின்
4. தனிமையில்

14. ' பக்தி ரசாம்ருத சிந்து' வில் குறிப்பிட்டுள்ள பக்தியின் அங்கங்கள் எத்தனை ?

1. 60
2. 68
3. 64
4. 62

15. ஸ்ரீகிருஷ்ணரின் ஆன்மீக குரு யார்?

1. கர்க முனிவர்
2. சாந்திபனி முனிவர்
3. பாகுரி ரிஷி
4. அவர் பரம இறைவனானதால் எந்த குருவையும் ஏற்கவில்லை

16. வால்மீகி முனிவரின் ஆன்மீக குரு யார்?
1. வசிஷ்டர்
2. விசுவாமித்திரர்
3. நாரதர்
4. வேத வியாசர்

17. இறக்கும் தறுவாயில் பகவான் நாமத்தை உச்சரித்து விஷ்ணு தூதர்களால் காப்பாற்றப்பட்டவர் யார்?
1. வால்மீகி
2. அஜாமிளன்
3. மிருகாரி
4. துருவ மகராஜா

18. ஒருவன் குருவின் துணையின்றி ஹரிநாமத்தை ஜெபித்தால் அதன் விளைவு என்ன?
1. தூய பக்தனாவான்
2. நாம அபராதம் ஏற்படும்
3. பாவங்களிலிருந்து விடுதலை
4. மேலுலகங்களுக்கு உயர்த்தப்படுவான்

19. ' குரு தேவதாத்மா' என்பதன் பொருள் என்ன?
1. நம் குருவை சொந்த ஆத்மாவை விட உயர்வாக மதிக்க வேண்டும்.
2. அவரிடம் முழுவதுமாக சரணடைய வேண்டும்
3. நம் உயிரினும் மேலாக நினைக்க வேண்டும்
4. அனைத்தும்

20. ஜட உலகில் வாழ்ந்தாலும் உலக விஷயங்களில் எவ்வித ஆசைகளும் இல்லாமல் இருப்பவர்களின் பெயர் என்ன?
1. மூர்ச்சித்த காஷயா
2. நிர்தூத காஷயா
3. பகவத் பார்ஷத தேக ப்ராப்த
4. துறவிகள்

21. எது 'ரதி' என்ற கிருஷ்ண பாவபக்தியை அளிக்கிறது?
    1. பிரம்ம ஞானம்
    2. வேதங்களை ஓதும் போது
    3. தேவர்களை வணங்கும் போது
    4. கோபால மந்திரமும் காம காயத்ரி மந்திரமும்

22. ஸ்ரீல நரோத்தமதாஸ தாகூராவின் திட்ச குரு யார்?
    1. ஸ்ரீல ரூபகோஸ்வாமி
    2. ஸ்ரீல சனாதன கோஸ்வாமி
    3. ஸ்ரீல லோகநாத கோஸ்வாமி
    4. ஸ்ரீல ஜெயதேவ கோஸ்வாமி

23. எவையெல்லாம் மாயை?
    1. அளவுக்கு மிஞ்சி பொருள் சேர்த்தல்
    2. புலன்கள் மூலமாக உலக சுகங்களைச் சுகித்தல்
    3. மோட்சம் பெற ஆசைப் படுதல்
    4. அனைத்தும்

24. பகவத் பாகவதர் என்று அழைக்கப்படுபவர் யார்?
    1. ஸ்ரீமத் பாகவதம்
    2. பக்தி ரசத்தில் மூழ்கியிருக்கும் சுத்தமான பக்தன்
    3. பாடல்கள் பாடுபவர்கள்
    4. மேலே ஒன்றும் இரண்டும்

25. உபமன்யு-வின் குருவின் பெயர் என்ன?
    1. விஸ்வாமித்திரர்
    2. தௌம்ய ரிஷி
    3. மார்க்கண்டேய ரிஷி
    4. வியாச தேவர்

## குரு தேவருக்கு ஆரத்தி

ஆரத்தி யுக குரு நாராயண கி
ஆரத்தி ஆரத்தி மங்கள முரத்தி

ஜென்ம மரண சமுத்ர நிகந்தி
ஜயதி ஜயதி ஜகத் குரு ஜயதி
ராக பக்தி ஜகதௌ ததாதி
ரமண மஞ்சரி ராதிக தாசி

தேவாரி பூர அற்புத ஜனனி
த்ரிலோக மகா பாகவத கி
தயாள ரூப ரமண சுந்தரி
துர்லப ராதா தாஸ்யம் ததாதி

மகாபிரபு கண பார்ஸத வசதி
மகா மந்த்ர ராஸ விலாஸினி
அம்ருத வாணீய மாதுர்ய ப்ரேமி
ஆனந்த ரசிக்க குருஜன க்ரீடதி

படைப்பு: Dr. பகவதி காந்தி தாஸ்ஸா

ஓம் அஞ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்சன ஸலாக்கயா
சக்ஸுர் உன்மிலிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய பிரபு நித்யானந்த
ஸ்ரீ அத்வைத கதாதர் ஸ்ரீ வாஸாதி கௌர பக்த விருந்த

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே  ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே



GOKUL BHAJAN GAUDIYA MATHA

(Gokul Publications, Kanyakumari, India)